# பண்பாடு

# Panpadu

பருவ இதழ் : 22 இதழ்: 1 வைகாசி : 2012



வண. தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்


✡ க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இலங்கைச் சொற்களின் பொருளும் பொதுத் தமிழ்ச் சொற்களின் இலங்கைப் பொருளும்

✡ அத்வைத வேதாந்தமரபில் கைவல்ய நவநீதம் - ஓர் ஆய்வு

✡ ஆறுமுகநாவலரின் நூலியல் சார்ந்த சைவமும் பெண்களும்

✡ நவீன நோக்கில் மரபுத்தமிழ் இலக்கணம்: கலாநிதி பண்டிதர் சச்சியின் மஞ்சுகாசினியம்

✡ இருபதில் ஈழத்துக் கவிதை அரசியல், போர் : கவிதை


வெளியீடு :
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
இல. 248 - 1/1, காலி வீதி,
கொழும்பு - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு : வைகாசி 2012
விலை : 50/-

**பேராசிரியர்.சு.சுசீந்திரராஜா**

இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மொழியியற் துறையின் முன்னைநாட் தலைவர் ஆவார். மொழியியல் தொடர்பான பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். எமது திணைக்கள பண்பாடு ஆய்வு மலரின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும் ஆவார்.

**திரு.ச.முகுந்தன்**

இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஆவார். இளம் ஆய்வாளர்களில் ஒருவரான இவர் பல ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்பித்து அறிஞர்களின் பாராட்டினைப் பெற்றவராவார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பை மேற்கொண்டு வருகின்றார்.

**கலாநிதி மைதிலி தயாநிதி**

யாழ். பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதத்தைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதற்றரத்தில் சித்தியெய்தியவர். அங்கேயே எம்.ஏ. பட்டத்தையும் ரொறண்ரோ பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். உதவி அரச அதிபராகவும், கொழும்புப் பல்கலைக் கழகப் பதில் பதிவாளராகவும் கடமையாற்றியவர். தற்போது கனடாவில் வாழும் இவர், உலகளாவிய மாநாடுகள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தவர்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். தமிழ், தமிழ் இலக்கியம், இந்து சமயம் போன்ற துறைகளில் ஆழ்ந்த புலமையும், ஆற்றலும் கொண்டவர். இவைகள் தொடர்பாக நூல்களை எழுதியதுடன் ஆய்வுக்கட்டுகைளையும் எழுதியுள்ளார.

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரான இவர், தமது இளங்கலைமாணி, முது தத்துவமாணிப் பட்டங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டவர். கலாசார உறவுகளுக்கான இந்திய நிலையத்தின் புலமைப்பரிசிலின் கீழ், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். மிகச்சிறந்த பெறுபேறுகளுக்காக ஆறுமுகநாவலர் புலமைப்பரிசில், பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் முதலிய பரிசில்கள் பெற்றவர். துணைவேந்தர்கள் மற்றும் இயக்குனர்கள் சங்கத்தினால் மிகச்சிறந்த இளம் ஆய்வாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். உயர் கம்பன், முதலிய 6 நூல்களின் ஆசிரியர். ஈழத்தில் கம்பன், இரகுவமிசம் முதலிய பல நூல்களின் பதிப்பாசிரியர்.

**பண்பாடு பருவ இதழில் பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் அக்கட்டுரைகளை எழுதியவர்களின் சொந்தக் கருத்துக்களாகும். இவை இவ்விதழை வெளியிடும் திணைக்களத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாகா.**

**-ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் குழு**

திரு. க.இரகுபரன்

கலாநிதி. ஸ்ரீபிரசாந்தன்

திரு. ம.சண்முகநாதன்

திருமதி. தேவகுமாரி ஹரன்

கலாநிதி. நந்தினி சண்முகலிங்கம்

**நிர்வாக ஆசிரியர்**

திருமதி. சாந்தி நாவுக்கரசன்

**பரிசீலனைக் குழு**

பேராசிரியர். சி.பத்மநாதன்

பேராசிரியர். எஸ்.சுசிந்திரராஜா

பேராசிரியர். ப.கோபாலகிருஷ்ணன்

**வெளியீடு :**

இந்து சமய கலாசார

அலுவல்கள் திணைக்களம்.

இல. 248-1/1, காலி வீதி,

கொழும்பு 04

ISSN : 2235-9621

# பண்பாடு

சமூக விஞ்ஞான ஆய்வுச்சஞ்சிகை

Refereed Journal of Social Science

**மலர் : 22 இதழ் : 01 வைகாசி 2012**

**அட்டைப்படம்**

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் (1913-1980)

தமிழ் இலக்கியமும் தமிழியல் ஆய்வும் சர்வதேச மட்டத்துக்கு விரிவுபடக் காரணமானோருள் முக்கியமான ஒருவர் வண. தனிநாயகம் அடிகள். இவர், 1953இலிருந்து Tamil Culture எனும் ஆய்வு சஞ்சிகையை வெளியிட்டமை மூலமும், 1964இல் நடைபெற்ற கீழைத்தேச அறிஞர்கள் மாநாட்டின்போது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை ஏற்படுத்தி சர்வதேச அளவில் தமிழ் மாநாடுகளை நடத்தியமை மூலமும் தமிழின் சர்வதேச மயமாக்கத்தைச் சாத்தியமாக்கினார்.

கத்தோலிக்கத் துறவியான இவர் ஏலவே வத்திக்கான் சென்று மறையியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருந்தபோதும் கல்வியியல் துறை விரிவுரையாளர் எனும் நிலையில் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள் பற்றி ஆராய்ந்து இலண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தமிழார்வத்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். லிற்ட். பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1961இல் மலேசியப் பல்கலைக் கழகத்தின் இந்தியவியல் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் நியமனம் பெற்றார். அங்கேயே முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தினார். பண்டைத் தமிழிலக்கியங்களில் இவர் பெற்றிருந்த புலமையால், அவற்றுள் அமைந்துள்ள இயற்கை, மனிதாயதம் பற்றிய கணிப்புக்குரிய ஆய்வுகளை வெளியிட்டார். தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மீளக் கண்டறிந்து, இந்திய- உலக நாகரிக வளர்ச்சியில் அவற்றின் இடத்தை மதிப்பிடுவதில் இவரின் பங்கு முதன்மையானது. இத் தகுதிப்பாடுகளோடு உலகின் தமிழ்த்தூதாக உலவிய அடிகள் பிறந்து நூற்றாண்டு காணவுள்ள இக்கால கட்டத்தில் அவர் பற்றிச் சிந்திப்பதும், நினைவு விழாக்கள், மாநாடுகளை நடாத்துவதும் நம் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இலங்கைச் சொற்களின் பொருளும் பொதுத் தமிழ்ச் சொற்களின் இலங்கைப் பொருளும்

- பேராசிரியர் சு.சுசீந்திரராஜா

த்வைத வேதாந்தமரபில் கைவல்ய நவநீதம் - ஓர் ஆய்வு

- ச. முகுந்தன்

ஆறுமுகநாவலரின் நூலியல் சார்ந்த சைவமும் (Textual Saivism) பெண்களும்

- கலாநிதி மைதிலி தயாநிதி

நவீன நோக்கில் மரபுத்தமிழ் இலக்கணம்: கலாநிதி பண்டிதர் சச்சியின் மஞ்சுகாசினியம்

- பேராசிரியர் அ.சண்முகதாஸ்,

இருபதில் ஈழத்துக் கவிதை அரசியல், போர் : கவிதை

- கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் இலங்கைச் சொற்களின் பொருளும் பொதுத் தமிழ்ச் சொற்களின் இலங்கைப் பொருளும்

பேராசிரியர் சு.சுசீந்திரராஜா

தற்காலத்தில் தமிழ் நாட்டில் வழங்குகின்ற சொற் பொருளே இலங்கையிலும் மிகப் பெரும்பாலான தமிழ்ச் சொற்களுக்கு வழக்கில் இருக்கக் காண்கின்றோம். ஓர் எடுத்துக் காட்டாக, நன்மதிப்பு, உயர்வான எண்ணம், ஆர்வம், விருப்பம் ஆகிய பொருளைக் கொண்ட சொல்லாக **அபிமானம்** என்ற சொல் இரு நாடுகளிலும் வழங்கி வருகின்றது.பல பொருள் குறிக்கும் சொல்லொன்றின் குறித்த பொருள் ஒன்றோ பலவோ குறிப்பிட்ட இரு நாடுகளுள் ஒரு நாட்டில் மட்டும் வழங்குவதையும் காண்கின்றோம். **அம்பலம்** என்ற சொல் இன்று இரு நாடுகளிலும், (ரகசியமாக இருக்க வேண்டியது) வெளியாகி விட்ட நிலை என்ற பொருளில் வழங்குகிறது. ஆயின் அது தமிழ் நாட்டில் மட்டும் கிராமத்தில் பொதுக் காரியங்கள் விவாதிக்கப்படும் அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும் ஊர்ப் பொது இடம் என்ற பொருளில் வழங்குகின்றது. இப் பொருள் இலங்கை வழக்கில் இல்லை. இதே போன்று இரு நாடுகளிலும் வழங்கும் **இழு** என்ற வினைச் சொல்லிற்கு க்ரியா தரும் பதினான்கு பொருள்களுள் பதின்மூன்று, இரு நாடுகளிலும் வழக்கில் உண்டு. ஆனால் (முடி) வாருதல் என்ற பொருள் இலங்கையில் மட்டும் வழங்குகிறது. மேலும், சில சொற்கள் இருநாடுகளிலும் வழங்குகின்ற போதிலும் அவை சொற்பொருளில் முற்றாக வேறுபடுகின்றன. **அயல்நாடு** என்ற சொல் இருநாடுகளிலும் வழங்குகின்றது. க்ரியாவின்படி, தமிழ்நாட்டில் அயல் நாடு என்றால் வெளிநாடு foreign country என்பது பொருளாகும். ஆனால், இலங்கையில் பக்கத்து நாடு என்பதே அதற்கு பொருள். 'அயல் நாடாகிய இந்தியா'' என்று இலங்கைத் தமிழர் கூறுவார்கள். ஆனால், 'அயல் நாடாகிய பிரித்தானியா''என்று கூறமாட்டார்கள். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அயல் என்ற சொல் அண்டை என்ற பொருளில் வழங்குகிறது. இலங்கையில் பேச்சுவழக்கில் **அயலட்டை** என்ற சொல் அக்கம் பக்கம் என்ற பொருளில் வழங்குகிறது. இச் சொல், அயல், அண்டை ஆகிய இரு சொற்களும் சேரும்போது திரிந்து அமைந்த வடிவம் எனக் கொள்ளலாம். அயலட்டை என்ற சொல்லை க்ரியா இலங்கை வழக்குச் சொல்லாகக் குறித்துள்ளது.

க்ரியாவின் அகராதி சொற்களின் வழக்கை ஆராய்ந்து 1700 சொற்களை இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் எனக் குறித்ததுபோல் பொதுத் தமிழ்ச் சொற்களின் இலங்கைப் பொருள் வழக்கைக் கணக்கிட்டு தொகையின் எண்ணிக்கையை வேறாக குறிப்பிடவில்லை. இலங்கைச் சொற்கள் எனக் குறிக்கப்பெற்றவற்றுள் பெரும்பாலானவை இலங்கைக்குள்ளே பொதுச்சொற்களாக வழங்கிவருகின்றன. இதே போன்று, இலங்கைப் பொருளாகக் காட்டப்பெற்றவற்றுள் பெரும்பாலானவை இலங்கைக்குள்ளே பொதுப்பொருளாக வழங்க, ஒரு சில மட்டும் வட்டார பொருளாக வழங்கி வருகின்றன. இலங்கையில் வட்டார வழக்குச் சொற்கள் பற்றி முன்னர் தமிழியல்சார் சிந்தனைத்துளிகள் தொகுதி II இல் எழுதியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ரியா தரும் இலங்கைச் சொற்களுள் பல சொற்கள், இலங்கையில் பல பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் க்ரியா தரும் பொருளுடன் வழங்காது, வேறு பொருளுடன் வழங்கக் காண்கின்றோம். இதே போன்று, குறிப்பிட்ட இடங்களில் பொதுத் தமிழ்ச் சொற்கள் (இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் எனக் குறிக்கப் பெறாத சொற்கள்) சிலவற்றிற்கு க்ரியா தரும் இலங்கைப் பொருள் சிறிது வேறுபட்டு வழங்கவோ, வழக்கில் முற்றாக இல்லாமல் இருக்கவோ காண்கிறோம். சொற்பொருள் குறித்த இவ்விரு நிலைகளையும் விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விபரம் பின்வருமாறு:

| க்ரியாவின் படி இலங்கைச் சொல் | க்ரியா தரும் பொருள் | யாழ்ப்பாணத்தில் வழங்கும் பொருள் |
|---|---|---|
| 1. அசைவு[2] பெ. | காவடி; wooden pole used for carrying burdens on one's shoulders. | வீடுகளில் குறிப்பாகக் குடிசைகளில் கூரையின் கீழ் உள்ள பகுதியில் பாய், விறகு போன்றவை வைப்பதற்காகப் பகர வடிவில் கட்டப்பெற்றுக் கீழே தொங்க விடப்படும் இரண்டு அல்லது மூன்று கயிறுகள். |
| 2. அண்ணளவாக வி.அ | அதிகபட்சமாக; at the maximum | கிட்டத்தட்ட; approximately. |
| 3. அண்ணாவி பெ. | (சிலம்பம் முதலியவை கற்றுத் தரும்) ஆசான்; a teacher master of martial arts such as சிலம்பம் | கூத்தாட்டத்திற்குப் பாடுபவர் பாடக்கற்றுத் தருபவர். |
| 4. அந்தரி வி. | பதற்றம் அடைதல்; be anxious;be agitated. | துணையின்றித் தனிநபராக இருந்து செய்வதறியாது கஷ்டப்படுதல்; to be forlorn, helpless. |
| 5. அருக்காட்டு வி. | வேடிக்கைகாட்டுதல் amuse. | ஓர் உதவியின் நிமித்தம் கெஞ்சட்டும் என்று வேண்டு மென்று மனமின்மை காட்டுதல். சில நாட்களாகக் கடையில் சாமான் வாங்கித் தருவதற்கு மாமா அருக் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | காட்டுகிறார். ஏன் என்று தெரியவில்லை. |
| 6. ஆடித்தூக்கம் பெ. | (பெரும்பாலும் வியாபாரம் குறித்து வரும்போது) ஆடி மாதத்தில் மந்த நிலை (of business or trade) slakness (prevailingin the month of ஆடி). | வேகமாக வீசும் காற்று ஆடி மாதத்தில் இடையிடையே வீசாத மந்த நிலை |
| 7. இடர்நிதி பெ. | பின்தங்கிய பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு அரசு வழங்கும் படி; allowance paid to government servants working in backward areas. | வாழ்க்கைச் செலவு அதிக ரிக்கும் போது (அரசாங்க) உத்தியோகத்தவர்களுக்கு சம்பளத்துடன் வழங்கப்படும் விசேட படி; distress allowance. |
| 8. இடுக்குப்பனை பெ. | நிறைய கள் வடியும் தன்மையுடைய பனை மரம்; palmyra tree that yields a sonsiderable quality of today. | கள் அல்லது பதநீர் பெறுவதற்கு பாளை சீவப்படும் பனைமரம் palmyra tree tapped for toddy or sweet toddy. |
| 9. இழைக்கட்டு வி. | வேண்டிக்கொண்ட காரியம் நிறைவேறுவதற்காக கோயிலுக்குச் சென்று கையில் கயிறு கட்டிக் கொள்ளுதல்; Perform the ritual of tying a thread in one's hand in a temble seeking fulfilment of a wish. | கிராமங்களில் ஒரு பொருளைத் திருடியவர்களுக்குத் தீங்கு நேரிடவேண்டுமென்று பிரார்த்தித்து கோயில் பூசை செய்பவரைக் கொண்டு வைரவரின் கழுத்தில் மந்திரித்த நூல் கட்டுவித்தல் (அருகி வரும் பழைய வழக்கு) |
| 10. இனசனம் பெ. | (ஒருவரின்) உறவினர்களும் சாதியைச் சேர்ந்தவர்களும்; relations and people of one's caste. | உற்றார்,உறவினர் kith and kin realtions. |
| 11. உச்சிக்கொள் வி. | (ஒருவரை அல்லது ஒன்றை) முந்துதல்; go past; overtake | ஓடுபவனை மறிக்கும் போது அவன் மாட்டிக் கொள்ளாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | தந்திரமாகத் தப்புதல் ஓடிய கள்வனை மறிக்க முயன்றபோது அவன் உச்சிக் கொண்டு ஓடிவிட்டான். |
| 12. உழவாரப்பிடி பெ. | காண்க உழவாரம். உழவாரம் (புல் செதுக்கப் பயனபடும்) களைக் கொத்தி போன்ற சிறிய சாதனம்; small implement used for wedding. | உழவாரத்தின் கைப்பிடி, மரத்தில் செய்யப்படுவது. |
| 13. ஒரு கண் தூங்கு வி. | (ஓய்வாக) கண்மூடுதல்; தூங்குதல்; sleep. | சிறிது நேரம் தூங்குதல். நேற்று இரவு ஒரு கண் கூடத் தூங்க முடியவில்லை. கதிரையில் இருந்து கொண்டு ஒரு கண் நன்றாக தூங்கி விட்டேன். |
| 14. ஒற்றை$^{2}$ பெ. | (புத்தகம், நோட்டு போன்றவற்றின்) பக்கம்; page. | (புத்தகம், நோட்டு போன்றவற்றின்) தாள்; a sheet of a book or note book |
| 15. கக்கட்டமிட்டு வி. அ. | மகிழ்ச்சியோடு; happily | உரத்து; சத்தமிட்டு. ( சிரித்தல் என்ற செல்லுடன் மட்டும்) நீங்கள் கக்கடமிட்டு சிரித்தல் குழந்தையின் தூக்கம் கெட்டு விடும் |
| 16. கங்குப்பனை பெ. | இளம் பனை மரம்; young palmyra tree. | அடிமரத்தில் கருக்கு நிறைந்துள்ள பனை; rough palmyra tree that is dificult to climb. |
| 17. கட்டுக்காசு பெ. | தவனை முறையில் பணம் செலுத்திப் பொருள் வாங்கும் முறை; hire purchase. | கட்டுப்பணம்; deposit தேர்தலில் பலர் கட்டுக்காசு இழந்தனர். |
| 18. கண்டல் பெ. | (காய்கறிகளில்) முற்றல்; ( of vegetables) over ripe | அடிமுதலிய பட்டதனால் வடு ஏற்பட்டுள்ள காய்; கண்டிப்போன காய். சில மாங்காய் நிலத்தில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | விழுந்ததால் கணடிப்போய் விட்டன. கண்டல் காய்களை வீசிவிடு. |
| 19. கிறுதி பெ. | மயக்கம்; giddiness. | வலிப்பு; தலைச்சுற்று ஊஞ்சலில் இருந்த கிழவனைக் கிறுதி தூக்கி எறிந்துவிட்டது |
| 20. கெலி பெ. | வெறி; madness | உணவில் கொள்ளும் ஆசை; அவா; greediness; insatiable desire for food |
| 21. கைக்கத்தி பெ. | அரிவாள்; sickle. | சிறுகத்தி |
| 22. கைச்சல் பெ. | (பெரும் பாலும் காய்களைக் குறித்து வரும்போது) கச்சல்; very tender and unripe fruit | கைப்பு; bitterness. இந்தக் கலவை மருந்து படு கைச்சல். காய்களுள் பாவற்காய் படு கைச்சல் காய். |
| 23. கைவிசேஷம் பெ. | (பரிசாக அளிக்கும்) பணம்; gift. | சோதிடத்தின்படி பஞ்சாங்கத்தில் புதுவருடத்தில் கைவிசேஷத்திற்கு எனக் குறித்த சுப வேளையில் அன்பளிப்பாகப் பணம் வழங்குதலும் (பெரியோரிடமிருந்து) பெறுதலும். |
| 24. கோம்பை பெ. | நுங்கு நீங்கிய பனங்காய்; the fruit of palmyra cut open with its flesh removed | இளநீர் நீங்கிய மட்டையுடன் சேர்ந்த தேங்காயும் நுங்கு நீங்கிய பனங்காயும் |
| 25. தடி விளக்குமாறு பெ. | (நின்று கொண்டே கூட்ட வசதியான) நீண்ட கைப் பிடியையும் படல் போன்ற அடிப்பாகத்தையும் கொண்ட ஒரு சாதனம்; broom | (நின்று கொண்டே கூட்ட வசதியான) நீண்டதடியின் ஒரு புறத்து அடிப்பகுதியில் தென்னை ஈக்கில்களை குத்துவாக்கில் நெருக்கமாக பரப்பி தகரத்தகட்டால் பினைத்து அமைக்கப்பட்ட சாதனம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. தாயறை பெ. | பூஜை செய்யவும் பத்திரம், நகை, பணம் போன்ற மதிப்பு மிகுந்த பொருள்களைப் பாதுகாப்பாக. வைக்கவும் உள்ள தனியறை | தனிவீடு (deatached house) கட்ட ஆரம்பிக்கும் போது நாளுக்கு அத்திவாரம் இடும் இடத்தை அண்டிய பகுதியில் கட்டப்படும் அறை. |
| 27. தும்புக்கட்டு பெ. | தென்னம் மட்டையின் நாரினால் கட்டப்பட்ட துடைப்பம்; விளக்குமாறு; broom made of coconut fibre | நின்று கூட்டுவதற்கு வசதியாக நீண்ட கைப்பிடியின் அடிப்பகுதியில் தென்னம் தும்புகளை குத்து வாக்கில் அடர்த்தியாகப் பரப்பிணைத்து அமைக்கப்பட்ட சாதனம். |
| 28. தும்புக்கட்டை பெ. | நீண்ட கைப்பிடி வைத்த துடைப்பம்; broom | பார்க்க; தும்புக்கட்டு |
| 29. தும்புத்தடி பெ. | வீடு கூட்டப் பயன்படும் ஒருவகைத் துடைப்பம்; broom | பார்க்க; தும்புக்கட்டு |
| 30. தூக்குத் தீர்த்தவன் பெ. | தூக்குத் தன்டனை விதிக் கப்பட்ட நபர். | (குற்றவாளிக்கு) தூக்குத் தண்டனையை வழங்கியவன். |
| 31. தெந்தட்டு பெ. | எதிலும் பட்டுக்கொள்ளாத போக்கு. | அரும்பொட்டு |
| 32. தோலுண்ணி பெ. | பிடிவாதாம் பிடிக்கும் நபர். | வெட்கம் உரோசம் அற்ற நபர், சுரனை கெட்ட நபர். |
| 33. நீதியரசர் பெ. | உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி. | உச்ச நீதிமன்றத்து நீதிபதிகளுள் ஒருவர். |
| 34. படலை பெ. | (வேலியில் அமைக்கப்படும்) தட்டிக் கதவு; படல். | ஓலை மரத்துன்டு இருப்புக் கம்பி போன்ற ஒன்றினால் செய்து வேலி அல்லது மதிலில் அமைக்கப்படும் கதவு போன்ற சாதனம். |
| 35. பண்டி வாழை பெ. | பச்சை நிறத்தில் இருக்கும் ஒரு | கிட்டத்தட்ட ஐந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | வகை வாழைப் பழம். | ஆறு அடி உயரத்திற்கு மேல் வளராத வாழை வகை பெரிய குலை போடும்போது வாழை மர அடியில் கிடங்கு தோன்டிவிடப்படும். |
| 36. பார்வை பார் வி. | குறிசெல்லுதல். | ஒருவரது நோயைக் குணப்படுத்தும் பெருட்டு அவர் மீது திருநீறு இட்டு வேப்பங்குழையால் அடித்து மந்திரித்தல் |
| 37. பிசங்குவி | (உடை தாள் போன்றவை) கசங்குதல். | (உடை, தாள் போன்றவை) அழுக்கடைதல். |
| 38. பூரான் பெ. | (பனங்கிழங்கு விளைவதற்கு முன்) வெள்ளை நிற உள்ளீட்டுடன் இருக்கும் பனங் கொட்டை / தேங்காய்ப் பூ | முளைத்த பனங் கொட்டைக்குள் அல்லது தேங்காய்க்குள் இருக்கும் வெள்ளை நிற உள்ளீடு. |
| 39. பேணி பெ. | அடுக்கு | செப்பு, அலுமினியம், எவர் சில்வர் போன்றவற்றில் செய்த குவளை. |
| 40. பேய்ச்சி பெ. | பைத்தியம் பிடித்தவள். | மடைச்சி. புத்திக் கூர்மை இல்லாதவள். |
| 41. பேயன் பெ. | கிறுக்கன் | மடையன். முட்டாள். |
| 42. மட்டைத்தேள் பெ. | பூரான் | விஷமுடைய ஊர்வன வகையைச் சேர்ந்த சிவப்பு நிறமும் நீல நிறமும் கொண்ட ஓர் உயிரினம். |
| 43. வண்டில் பெ. | இரட்டை மாட்டு வண்டி | ஒற்றை மாட்டு அல்லது இரட்டை மாட்டு வண்டி. |
| 44. வாசிகசாலை பெ. | நூலகம் | செய்தித்தாள்கள் வாசிப்பதற்காக அமைக்கப்பெற்ற கட்டடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள சொற்களுள் பதினெட்டுச் சொற்கள் பேரகராதியில் உண்டு. அச்சொற்களும் அவற்றிற்குப் பேரகராதி தரும் பொருளும் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. அண்ணாவி | உபாத்தியாயர் ; கூத்துத் தலைவன்; அதிகாரி. |
| 2. அந்தரி | தனித்திருத்தல் ; உதவியற்றிருத்தல்; மாறுதல்; கழித்தலாலுண்டாகுஞ் சேஷமறிதல். |
| 3. இடுக்குப் பனை (J) | கள்ளூறும் பனை palmyra tree from which today is drawn. |
| 4. இழைக்கட்டு | காப்புக்கட்டு;typing of a string on the wrist for religious ceremonies and for vows. |
| 5. ஒற்றை | ஒன்று; ஒற்றைப்பட்ட எண்; தனிமை; ஒப்பின்மை; தனியோடு; loose leaf of a book. |
| 6. கங்குப் பனை (J) | அடியிற் கருக்குச்சூழ்ந்த பனை. |
| 7. கெலி (J) | ஆசை; eagerness;greediness ; insatiable desire for food. |
| 8. கைக்கத்தி | சிறுகத்தி |
| 9. கைச்சல் | கைப்பு |
| 10. கோம்பை | தேங்காய் முதலியவற்றின் மேலோடு ; sheel of a coconut with the husk;young palmyra fruit after the edible kernel is removed. |
| 11. தும்புக்கட்டு (J) | தேங்காய் நாராற் செய்த துடைப்பம் ; sweeping brush made of coconut fibres. |
| 12. பார்வைபார் | நோக்கி மந்திரித்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 13. பிசங்கு (J) | அழுக்காதல். |
| 14. பூரான் (J) | பனை முளை; edible matter in the palmyra stone or coconut formed when the root shoots forth. |
| 15. பேய்ச்சி | பேய்பிடித்தவள். |
| 16. பேயன் | பைத்தியக்காரன். |
| 17. மட்டைத்தேள் (J) | தேள் வகை; பூரான் வகை. |
| 18. வண்டில் | வண்டி. |

இச்சொற்களுள் ஏழு சொற்களை மட்டும் யாழ்ப்பாண வழக்குச் சொற்களாக (J) எனக் குறித்துள்ளது. அவற்றை நாமும் இங்கு பேரகராதி (J) எனக் குறித்துக் காட்டியுள்ளோம். ஏனைய சொற்கள் அன்று பொதுவழக்குச் சொற்களாகவே வழங்கின. க்ரியா இலங்கைச் சொற்கள் எனத் தந்தவற்றுள் எட்டுச் சொற்கள் வடிவத்தில் சிறிய வேறுபாட்டுடன் பேரகராதியில் இடம் பெற்றுள்ளன. அவை பின்வருமாரு;

| **க்ரியா** | **பேரகராதி** | **பேரகராதியிப் பொருள்** |
|---|---|---|
| 1. இனசனம் | இனசனம் | உற்றாருறவினர் |
| 2. ஒரு கண் தூங்கு | ஒரு கண்ணுக் குறங்கு | சிறிது தூங்குதல் |
| 3. கக்கட்டமிட்டு | கக்கட்டமிட்டு (J) | சிரிப்பில் உரத்த சத்தஞ் செய்தல் |
| 4. கைவிசேஷம் | கைவிசேடம் | கைராசி; பரிசு |
| 5. தோலுண்ணி | தோலுணி | அற்பன் |
| 6. நீதியரசர் | நீதிராசா (J) | நியாயாதிபதி |
| 7. படலை | படல் | பனையோலையாலேனும் முள்ளாலேனும் செய்யப்பட்ட அடைப்பு |
| 8. பண்டிவாழை | பன்றிவாழை | ஆனைவாழை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ரியாவின் அகராதியில் பொதுச் சொற்கள் பலவற்றில் இலங்கைப் பொருள் கூறப்பெற்றுள்ளது.மொத்தமாக கிட்டத்தட்ட 100 பொருள் இலங்கைப் பொருளாக உள. சில சொற்களுக்குத் தரப்பெற்றுள்ள இலங்கைப் பொருள் யாழ்ப்பாணத்தில் வழங்கும் பொருளிலிருந்து வேறுபடுகிறது. பொருள் வேறுபாடு பின்வருமாறு;

| பொதுச்சொல் | க்ரியா தரும் இலங்கைப் பொருள் | யாழ்ப்பாண வழக்குப் பொருள் |
|---|---|---|
| 1.அமுது | சர்க்கரைப் பொங்கல் | கோயிற் பூசையில் வைப்ப தற்கு ஐயர் சமைத்த பொங்கல் |
| 2.கூட்டு | சிறிது நீர்விட்டு மிளகாயை அரைத்து உருட்டி வைத்தல் | சிறிது நீர்விட்டு தேங்காய்ப் பூ, சரக்கு அல்லது மிளகாயை அம்மியில் அரைத்துத் திரட்டுதல். |
| 3.கேணி | (பெரும்பாலும் கோயிலுக்கு அருகில் உள்ள) குளம் | (பெரும்பாலும் கோயில் ஒன்றை அண்டிய பகுதியில்) படிகள் மூலம் இறங்கக் கூடிய நீர்நிலை. |
| 4.தலைவாசல் | வீட்டின் முன்வாசலை ஒட்டி அமைந்திருக்கும் வராந்தா | வீட்டின் பழைய அமைப்பில் பிரதானமான முன் கதவைத் திறந்ததும் கூடம் போல (hall) இருக்கும் அறை. |
| 5.பட்டை | பனை ஓலையால் நெருக்கமாகப் பின்னித் தயாரிக்கப்பட்ட கூடை | நீர் மொள்வதற்கு பனை ஓலையால் நெருக்கமாகப் பின்னித் தயாரிக்கப்பட்ட முக்கோணக் கூடை |
| 6.வறுவல் | பொரியல் | வறை |
| 7.வேள்வி | (ஆகம விதிப்படி கட்டப்படாத கோயில்களில்) இறைவனுக்குப் படைக்கும் சடங்கு | (ஆகம விதிப்படி கட்டப்படாத கோயில்களில் இடம் பெறும்) மிருக பலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ரியாவின் அகராதி பொதுச் சொற்களுக்குத் தரும் இலங்கைப் பொருள்களுள் சிலவற்றை இலங்கையில் வட்டார வழக்கப் பொருளாகக் கருத வேண்டியுள்ளது.ஏனென்றால் அவை இலங்கை முழுவதிலும் வழக்கில் இல்லை. எடுத்துக்காட்டாகப் பின்வரும் இலங்கைப் பொருள் யாழ்ப்பாண வழக்கில் இல்லை. அவை வழங்கும் வட்டாரங்களைக் கள ஆய்வு மூலம் கண்டறிதல் வேண்டும்.

| | |
|---|---|
| 1.காந்து வி. | அரிக்கும் உணர்வு ஏற்படுதல்; அரித்தல் feelitchy |
| 2.சடங்கு பெ. | திருவிழா; உற்சவம் festival ; celebration. |
| 3.தேரை பெ. | ஒரு வகைத் தோல் நோய். |
| 4.பொய் வி. | ஏதிர்பார்த்த படி பயிர் விளையாமல் போதல். |
| 5.வழுவு வி. | நழுவு; slip;slide |
| 6.வறுத்தெடு வி. | (ஒன்றைச் செய்யும்படி ஒருவரை) திரும்பத் திரும்ப வலியுறுத்தல். |
| 7.வெளியார் பெ. | (உறவினர் அல்லாத) அந்நியர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வைத வேதாந்தமரபில் கைவல்ய நவநீதம் - ஓர் ஆய்வு

- ச. முகுந்தன் BA. (Hons) MA, Mphil
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகக் கற்கைகள்புலம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்:

அத்வைத வேதாந்தம் என்பது ஆதிசங்கரரோடு தொடங்கி அவருடனே நிறைவுபெற்ற ஒரு தத்துவக்கோட்பாடு அன்று. அது உபநிடதங்களில் வித்தூன்றப்பட்டு பிரம்ம சூத்திரத்தில் வேரூன்றி மாண்டுக்யகாரிகையில் துளிர்விட்டு ஆதி சங்கரரின் ஆளுமையால் விருட்சமாகியது. ஆதிசங்கரருக்குப் பின்னர் அவரின் புகழ் பெற்ற சீடர்களான பத்மபாதர், சுரேஷ்வரர் மண்டன மிசிரர், வாசஸ்பதி மிஸ்ரா ஆகிய நான்கு அறிஞர்களால் அத்வைதம் தனது முதன்மையான நான்கு கிளைகளை அகல விரித்தது எனலாம். (சுரேஷ்வரரும் மண்டன மிசிரரும் வேறல்ல ஒருவரே என வாதிட்டுவோருமுளர்) இவற்றுள் விவரணச் சிந்தனைப்பள்ளி, பாமதிச் சிந்தனைப்பள்ளி ஆகிய இரண்டு அத்வைதச் சிந்தனைப் பள்ளிகள் முதன்மையானவை எனலாம். ஆதிசங்கரரின் நேரடி மாணாக்கரான பத்ம பாதரால் எழுதப்பட்ட பஞ்சபாதிகை என்ற நூலை அடியொற்றியது விவரணச் சிந்தனைப் பள்ளியாகும்.

ஆதி சங்கரரின் பிரம்ம சூத்திர பாடியத்திற்கு வாசஸ்பதி மிஸ்ரா ஒரு விவரணத்தை எழுதினார். அதுவே "பாமதி" என்கிற புகழ்பெற்ற பனுவலாகும். இப்பனுவலை அடியொற்றி வளர்ந்த சிந்தனாகூடமே பாமதிச் சிந்தனைப் பள்ளியாகும்.

தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவரணச் சிந்தனைப் பள்ளியின் செல்வாக்கே பெரிதும் நிலை பெற்றிருந்தது. விஜயநகர சாம்ராஜ்ஜித்தின் தோற்றுவாயுடன் பெரிதும் சம்பந்தப்பட்ட அறிஞரான வித்தியாரண்யருடைய (கி.பி. 14) நூல்களான விவரணப் பிரமேய சங்கிரகம், பஞ்சதசி, திருக்குதிரிசிய விவேகம், சீவன் முக்தி விவேகம் போன்றன தமிழகத்தில் அறிமுகமானதும் இதற்கு முக்கியமானதொரு காரணமாகும். விஜயநகர சாம்ராஜ்யத்துடன் உத்வேகம் பெற்ற வீர சைவர்களிடமும் அத்வைத வேதாந்தச் செல்வாக்கு அதிகம் காணப்பட்டது.

தமிழில் கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோற்றம் பெற்ற வேதாந்திகளில் தத்துவராயர், தாண்டவராயர், பாம்பன் சுவாமிகள் வீரையாளவந்தார், ரமணமகரிஷி போன்றோர் முக்கியமானவர்களாவர். இவர்களாலும் இவர்களை அடியொற்றிய இன்னபிறராலும் தமிழில் அநேக வேதாந்த பனுவல்கள் இயற்றப்பட்டன.

தத்துவராயரின் வேதாந்த அடங்கன் முறை எனப்படும் 18 நூல்களும் தாண்டவராயரின் கைவல்ய நவநீதமும், வீரை ஆளவந்தாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாவசிட்டமும் ரமணமகரிஷியின் ஏகான் மவாதம் பஞ்சகம், உபதேச உந்தியார், ஆத்தும போதம் போன்ற நூல்களும் தமிழ் வேதாந்தப் பனுவல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### கைவல்ய நவநீதம்

அத்வைத வேதாந்தத்தின் அடிப்படை களை விளக்கும்வகையில் தமிழில் எழுச்சி பெற்ற பனுவல்களில் மிகப் பிரதானமாக மூலமாக கைவல்ய நவநீதத்தின் வகிபங்கு பிரதானமாதாகும். கைவல்யம் என்பது பிரம்மத்தின் உண்மையைத் தெள்ளத் தெளிவாக விளங்கவைத்தல் எனப் பொருள்விளக்கமுறும்.

நவநீதம் என்றால் வெண்ணெய் ஆகவே வேதாந்த மெய்ப்பொருளை வெண்ணெய்போலத் திரட்டி வழங்குவது என்பதே இதன் விளக்கமாகும்.

**"படர்ந்த வேதாந்தம் என்னும் பாற்கடல் மொண்டு முன்னூல்**

**குடங்களில் நிறைத்து வைத்தார் குரவர்கள், எல்லாம் காய்ச்சிக் கடைந்தெடுத்து அளித்தேன் இந்தக் கைவல்ய நவநீ தத்தை....................."[1]**

என்ற பாயிரப் பாடலில் இந்நூற் பெயருக்கான விளக்கத்தையும் நூற் பொருளின் சாரத் தையும் அது எழுச்சி பெற்றமைக்கான பின்புலத்தையும் இந்நூலின் ஆசிரியரான தாணடவராய சுவாமி கள் சூசகமாகப் புலப்படுத்தியுள்ளமை கவனிக்கற்பாலது.

பரந்து விரிந்த உபநிடதங்களின் ஆராய்சிக்குரிய "வேதாந்தம் என்னும் பாற்கடல்" என்றும் அப்பொருள் மரபை அடியொற்றிக் கௌடபாதர், ஆதிசங்கரரர் சுரேசுவர் உட்பட்ட வேதாந்திகளின். கருத்துருவாக்கங்களை அப்பாற்கடலில் இருந்து முகந்து குடங்களில் நிறைக்கப்பட்ட பாலாகவும் அப்பாற்குடங்களில் இருந்த பாலைக் காய்ச்சிக் கடைந்தெடுத்துப் பெறப்பட்ட வெண்ணெயே (நவநீதம்) தனது நூலென்றும் தாண்டவராய சுவாமிகள் சுட்டியுள்ளார்.

### நூலின் ஆசிரியரும் காலமும்:

கி.பி. 1409இல் சோழ நாட்டிலுள்ள நன்னிலம் என்ற ஊரில் பிறந்த தாண்டவராயர் என்பவரே கைவல்ய நவநீதத்தின் ஆசிரியராவார். இவர் தனது ஊரில் வேதாந்த விற்பன்னராகத் திகழ்ந்த "நாராயண குரு" என்பவரிடம் உபதேசம் பெற்றார். தென்னாட்டில் வேதாந்த மரபினைச் செழிப்புறச் செய்த விவரணச் சிந்தனைப்பள்ளிக்குரியவரான வித்தியாரண்யரின் பிரதம சீடரே "நாராயணகுரு" என்பது குறிப்பிடத்தக்கது.

தாண்டவராயரின் கைவல்ய நவநீதம் அதன் பொருளமைதியின் மேன்மையால் வடமொழியில் சங்குகவி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது. 19ஆம் நூற்றா ண்டின் நடுப்பகுதியில் இந்நூலானது சார்ல்ஸ் கிரால் (Charles Graul) என்பவரால் ஆங்கிலத்திலும் ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது.2

### நூற்கட்டமைப்பு:

கைவல்ய நவநீதம் விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டது. எல்லாமாக இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று விருத்தங்கள் உள்ளன. இவற்றுள் எழுசீர் விருத்தங்கள் பத்தும், எண்சீர் விருத்தங்கள் பதினொன்றும் நீங்கலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவை யாவும் அறுசீர் விருத்தங்கள் ஆகும். ஒரு இலக்கியத்துக்குரிய இனிமையான சந்தவீச்சுடனும் அணியலங்காரங்களுடனும் தத்துவார்த்தச் செறிவான கருத்தமைவுகளை இழையோடவிட்டுள்ளமை இந்நூலின் சிறப்புக்களில் ஒன்றாகும்.

இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. அவையாவன பாயிரம் (ஏழு பாடல்கள்) தத்துவ விளக்கப்படலம் (நூற்றொரு பாடல்கள்,) சந்தேகம் தெளிபடலம் (நூற்று எண்பத்தைந்து பாடல்கள்) என்பனவாகும்.

பொருள்மரபில் மட்டுமன்றி அமைப்பு முறையிலும் உபநிடதமரபினைத் தழுவிய-தாகக் குரு சீட உரையாடல் வடிவத்தில் இந்நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒரு விருத்தத்தின் முதல் இரண்டு அடிகள் சீடனின் ஐயவினாவாக அமையப் பின்வரும் அடிகள் குருவின் விளக்கமாக அமைகின்றன. பல சந்தர்ப்பங்களில் ஒரு விருத்தப்பா முழுமையும் சீடனின் வினாவாகவும் அதனைத் தொடர்ந்து வருகின்ற ஒன்றுக்கு மேற்பட்ட விருத்தங்கள் ஞானகுருவின் விளக்கங்களாகவும் அமைகின்றன.

தத்துவக் கோட்பாட்டைப் புரிய வைக்கும் படிநிலைகளில் இந்திய அறிவாராய்ச்சியிலுக்கே உரிய நியாயித்தல் உத்திகளும் இப்பனுவலில் கையாளப்பட்டுள்ளன. சாகச்சந்திரநியாயம், தூல அருந்ததி நியாயம், தண்டபூப நியாயம் முதலியன அவ்வகையில் குறிப்பிடத்தக்கனவாகும்.

**நியாயித்தல் உத்திகள்:**

**சாகச்சந்திர நியாயம், தூலஅருந்ததி நியாயம் என்பவற்றின் பயில் நிலை**

தூலம் - பருமை

அருந்ததி - வசிட்டரின் மனைவி (நட்சத்திரம்)

திருமண நிகழ்ச்சியில் மணமகன் மணமகளுக்குக் காட்டும் விண்மீனே அருந்ததியாகும். அது வடக்கே சப்தரிஷிமண்டலம் எனப்படும். ஏழு விண்மீன்களுள் வசிட்ட முனிவரைக்குறிக்கும் பிரகாசமானதொரு விண்மீனுக்கு அருகில் உள்ளது. எனவே அருந்ததி விண்மீனைக் காட்டமுற்படும் ஒருவன் சப்தரிஷி மண்டலத்தினைக் காட்டி அவற்றில் வசிட்டர் விண்மீனைக் இனங்காட்டி அதன்பின்பே அருகில் உள்ள அருந்ததி விண்மீனைச் சுட்டிக்காட்ட முடியும்.

நன்கு தெரிந்த ஒன்றிலிருந்து தெரியாத விடயத்திற்கு ஆற்றுப்படுத்துகின்ற முறையியலுள் ஒன்றாகவே தூல அருந்ததி நியாயித்தல் உத்தியானது தத்துவப் புலத்தில் கையாளப்படுகின்றது.

கைவல்ய நவநீதத்தில் அதன் ஆசிரியர் சூக்கும வஸ்தாகிய பிரம்மத்தின் இயல்பை விளக்குவதற்கு முன்பாக தூலரூபமாகத் தெரிகின்ற பிரபஞ்சத்தின் யதார்தத்தை ஞான-குருவானவர் விவரிப்பதாகக் குறிப்பிடுகின்றார். மரங்கள் நிறைந் சோலையினூடாக மூன்றாம் பிறையைக் காட்டுவது போலவும் பிரகாசமான சப்தரிஷி மண்டலத்தினைக் காட்டி அருந்ததியைக் காண்பிப்பது போலவும் இந்த முயற்சியில் ஞானாசிரியன் ஈடுபடுவதாகக் குறிப்பிடுகின்றார்.

**"தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார் போல்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்டுவார் போல்**

**தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும ரூபமான**

**மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கினாரே"** [3]

(சாகை - கிளை, கிளை நுனி)

மூன்றாம் பிறையை காட்டும் ஒருவன் நிலத்தில் உள்ள குறிப்பிட்ட மரத்தின் கிளைநுனியைச், சுட்டிக்காட்டி அதற்கு நேரே மேலே வானத்தில் பிறையுள்ளது எனக் காட்டுவது போல மெய்ப்பொருளியல்பினைப் பக்குவம் உள்ள மாணவனுக்கு அவன் உணரத்தக்க நிலையில் நின்று படிப்படியாக உணரவைப்பது சாகச்சந்திர நியாயத்தின் பயில்நிலையாகும்.

### தண்டபூப நியாயத்தின் பயில்நிலை:

ஓர் அப்பம் சிறு தடியில் கோர்த்து வைக்கப்பட்டது. பூனையொன்று அச்சிறு தடியினை விழுங்கிற்று என ஒருவர் கூறி-னால் அப்பம் என்ன ஆயிற்று எனக் கேட்க வேண்டியதில்லை. உண்ணப்பட முடியாத தடியையே விழுங்கிய பூனை அப்பத்தினை என்ன செய்திருக்கும் என்பது கூறாமலே விளங்கும். இதுவே தண்டபூபநியாயம் அல்லது கைமுதிக நியா யமாகும். அதாவது ஒரு கருத்தினைப் பிரதான எடுத்துரைப்பினால் விளக்கிக் கூறும்போது அப்பிரதான எடுத்துரைப்பினுள் உள்ளடங்கியுள்ள உபவிடயங்களும் கூறா-மலே விளக்கப்படுவதே தண்டபூபநியாயத்தின் பயில்நிலை உத்தியாகும்.

இதனைக் கைவல்ய நவதீதத்தின் ஆசி ரியர் ஞானத்தின் இயல்பினைச் சீடனுக்கு விளக்குவதற்காகக் கையாண்டிருக்கிறார்.

**"மதுரமாம் கட்டி சுட்ட மாப்பணியாரம் எல்லாம்**

**மதுரமாக்கிய அதற்கு மதுரந்தான் சுபவம் அன்றோ......"** [4]

மாப்பலகாரங்கள் அனைத்தையும் தித்திப்பாக்கிய வெல்லக்கட்டி தன்னியல்பில் தித்திப்பானதாக அன்றி வேறெவ்வாறு இருக்க முடியும் என்ற மேற்கூறிய எடுத்துக்காட்டில் தண்டபூப நியாயத்தின் பயில்நிலையை அவதானிக்க முடிகிறது.

### கடவுள் வாழ்த்து:

அத்வைதிகள் குணம் குறிகளோடு கூடிய ஈஸ்வர நிலையை அதி உன்னதாமானதாகக் கருதுவது கிடையாது. சுத்தசைதன்யம் எனப்படுகின்ற பரிபூரண அறிவாகிய பிரம்மம் நாமரூபங்களையும் காலதேசங்களையும் கடந்தது. அந்தவகையில் நிர்க்குணமே பிரம்மத்தின் இயல்பு என்பதே ஆதிசங்கரரர் உள்ளிட்ட அத்வைதிகளின் முடிவாகும். சகுண நிலை என்பது ( சக - குணம்) மாயையின் சேர்க்கையால் விளைவதாகை யால் அதனை அத்வைதிகள் உயர்வாகக் கருதுவதில்லை.

தாண்டவராயர் நூற்பாயிரத்தின் முதல் ஐந்து பாடல்களில் சுத்த சைதன்ய வஸ்தாகிய பரப்பிரம்மத்தையே போற்றியிருப்பது கண்கூடு. குறிப்பாக இரண்டாம் பாட லில் மும்மூர்த்திகளுக்கும் மேலான பரம்பொருளாகிய சுத்தசைதன்யத்தை பணிகின்றேன் எனப் போற்றுவதும் இது போலவே நான்காவது பாடலில் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபடுத்தி உணர வைக்கின்ற அந்தக்கரணங்கள், ஞான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மேந்திரியங்களின் தன்மையை உரைத்து அவற்றைத் தவிடுபொடியாக்கித் தானே பிரமம் என உணர வைக்கவல்ல. ஞானாசிரியனைப் போற்றுவதும் கவனிக்கத்தக்கன.

**“என்னுடைய மனது புத்தி இந்திரிய சரீரம் எல்லாம்**

**என்னுடைய அறிவினாலே இரவிமுன் இமமே யாக்கி**

**என்னுடை நீயும் நானும் ஏகமென்(று) ஐக்கியஞ் செய்ய**

**என்னுடைக் குருவாய்.............”** [5]

**உள்பொருள் ஒன்றே என்பது:**

அத்வைதம் எப்பொழுதும் இருப்பு நிலையில் ஒரு பொருள் மட்டுமே உண்மை என்பதைச் சாதித்துள்ளது. ஒருமை வாதம், கேவலாத்வைதம், ஏகான்மவாதம் முதலிய காரணச் சிறப்புப் பெயர்களால் அத்வைதம் சுட்டப்பட்டதற்கான அடிப்படையும் இதுவே யாகும்.

**“குணப்பொருளாம் பிரம்மம் ஏகம் அன்ன பொருள் ஒருமையறிந்து..........”** [6]

**“தானன்றி வேறொன்றுமில்லாத பூரணம்”** [7]

**“எல்லையின் ஆம் எப்போதும் ஏகம் என்று இருந்திடாயே”** [8]

**“நித்தமும் அது நீயாகும். நீயதுவாகும் என்னும் அர்த்தமும் அகண்டம் என்றே அசி பத ஐக்கியம் காட்டும்”** [9]

**“அது இது இரண்டும் ஆகா அகம் பொருள் அறிவாய் நீயே”**[10]

**“என்னுடை நீயும் நானும ஏகமென்று ஐக்கியஞ் செய்ய.......”**[11]

என்றவாறு கைவல்ய நவநீத ஆசி ரியரும் தனது பனுவலில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அத்வைதத்தின் ஒருமைவாத நிலைப்பாட்டினை வலியுறுத்தத் தவறவில்லை.

**பிரம்மத்தை வர்ணிக்க இயலுமா?**

உபநிடதங்களில் எழுப்பப்பட்ட இக்கேள்விக்கு முடியாது, இயலாது (நேதி நேதி) என்ற புகழ்பெற்ற பதிலே ஞானாசாரியார்களால் தரப்பட்டுள்ளது. அத்வைத வேதாந்த மரபும் இதனையே பின்பற்றி எதிர்நிலை யுக்தி மூலம் பிரம்மத்தின் இயல்பைச் சித்திரித்துள்ளது. கைவல்ய நவநீதமும் இதற்கு விதிவிலக்கன்று.

**“சலனம் இன்மையும் அஞ்சனம் இன்மையும் பிரமேயம் இன்மையும், ரூபம் இன்மையும் அணு இன்மையும், குணம் இன்மையும், பிறப் பின்மையும், முடிவின்மையும் அவயவம் இன்மையும், சரீ ரம் இன்மையும் விகாரம் இன்மையும் இருமை இன்மையும் என்று சொல்லப்பட விலக்கு நாமங்களும் அனேகம் உள்ளனவாம்”**

என்ற பொருள்தருகின்ற

**“அசலம் நிரஞ்சனம் அமிர்தம் அப்பிரமேயம் விமலம் வசனாதீதம்,**

**அசடம் அநாமய அசங்கம்.......**

**அசரீரம் அவிகாரம் அத்துவிதம் எனவிலக்கும் அநேகம் உண்டே”**[12]

என்ற பாடல் இதற்குத் தக்கசான்றாகும்.

**அடிப்படை விவாதங்கள்:**

பிரம்ம ஒன்றே முற்ற முடிந்த மெய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் (Absolute Reality) என்பதும் ஜீவன் (Invidiual self) பிரம்மத்தின் சுருக்கமே (Abridgement of Brahman) என்பதும் அத்வைத வேதாந்த முடிவு.

எவ்வாறாயினும் ஆன்மா, ஆன்மா அல்லாதது ஆகிய இரண்டின் கூட்டு வடிவமே ஜீவன் அல்லது தனி ஆன்மா ஆகும். இவ்விரண்டையும் ஒன்றெனக் கொள்ளுகின்ற குழப்பத்தின் அடிப்படையிலேயே ஜீவனுக்குரிய அனைத்து அனுபவமும் எழுகிறது. ஆன்மா, தன்னை ஆன்மா அல்லாததோடு ஒத்த உணர்வினால் ஒன்றென நினைக்கிறது. பிழைபடும் இவ்வுணர்வே அனைத்து அனுபவத்திற்கும் காரணமாகிறது.

உபாதிகளோடு அமையும் தொடர்பினாலேயே இது நிகழ்கிறது. இந்த உபாதிகளின் விருத்தி அவித்தையால் நிகழ்வதாகும். ஆன்மாவின் எல்லைக்குட்பட்ட தன்மையும், தனித்தன்மையும், உபாதிகளின் சேர்க்கையால் ஏற்படும் குறைபாடுகளேயாகும். இவையே உலகியல் என்ற தொடர்சாகரத்துள் ஆன்மாவை தனியன்களாக உணரவைத்து அனுபவ நிலைக்கு உட்படவைக்கின்றன.

ஆன்மாவும் பிரம்மமும் வேறல்ல என்ற நிலைப்பாட்டினை உடைய ஏகான்மவாதிகளான அத்வைதிகள் இதனை விவரிக்கும் வகையில் மூன்று வாதங்களை முன்வைத்துள்ளனர்.

**அவையாவன**

01. விம்பப் பிரதிவிம்பவாதம்

(Theory if the original and its Reflaction)

02. அவச்சேதவாதம் (Theory of Limitation)

03. ஆபாசவாதம் (Theory of Semblance or Apperence) என்பனவாகும்.

**விம்பப் பிரதிவிம்ப வாதம்:**

மூலப்பொருள், அதன்பிரதிபலிப்பால் தோன்றுகின்ற மூலப்பொருளின் நகல் (அது பிரதிவிம்பம்), பிரதிபலிப்பு நிகழ்வதற்கான ஓர் ஊடகம் (மேற்பரப்பு) ஆகிய மூன்று கூறுகள் இவ்வாதத்திலே சம்பந்தமுறுகின்றன.

மூலப்பொருளின் நகலாகத் தோன்றுகின்ற பிரதிவிம்பத்தில் மூலப் பொருளின் இயல்பொற்று காணப்படினும் அது பிரதிபலிக்கின்ற ஊடகத்தின் பண்புக்கேற்றவகையில் சில புதிய தன்மைகளையும் அப்பிரதிவிம்பம் கொண்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக சமுத்திர அலைகளில் தெரியும் சந்திரவிம்பத்திற்கும், கலங்கிய சிறு குட்டையில் தெரிகின்ற சந்திரவிம்பத்திற்கும், கிணற்றுக்குள் தெரிகின்ற சந்திரவிம்பத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடலாம். அலைகின்ற நீரில் தெரியும் சந்திரன் அலைவதுபோல் காட்சிதரும். சேற்றுக்குட்டையில் தெரியும் சந்திரனின் பிரதிவிம்பமானது கலங்கியது போல் தெரியும். இங்கே பிரதிவிம்பங்களின் இந்த வேறுபட்ட காட்சி புலப்பாட்டிற்கு ஊடகத்தின் செல்வாக்கே காரணமாயமைந்துள்ளது.

அது போலவே பிரம்மத்தின் பிரதி பலிப்பாகத் தோன்றினும் ஜீவன்களில் உபாதிகள் காரணமாக வியவகார நடைமுறை வாழ்வில் பல அம்சங்கள் தொற்றிக்கொள்கின்றன. இவற்றின் காரண-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக ஜீவன்கள் பல்வேறு செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டது போலத் தோன்றும். ஆனால் உண்மையில் அவை யாவும் உபாதிகளால் நேர்ந்தனவாகையால் அவற்றின் பயன்கள் யாவும் உபாதிகளைச் சேருமேயன்றிப் பிரம்ம சொரூபமான சீவ னைப் பாதிப்பதில்லை.

நீர் நிலைகளில் அல்லது நீர் நிரம்பிய பாத்திரத்தில் நீர் வற்றியவுடன் சந்திரனின் பிரதிவிம்பங்கள் மறைவதுபோல பிரம்மத்தின் பிரதிபலிப்பிற்கு ஊடகமாக விளங்கும் ஜீவன்களின் உபாதிகள் நீங்குகின்ற பொழுது அவையாவும் ஏகத்துவமான பிரம்மமே உண்மையானது என்ற யதார்த்தம் உணரப்படும். இதுவே அத்வைதம் கூறுகின்ற விம்பப் பிரதிவிம்ப வாதத்தின் அடிப்படை விளக்கமாகும். அத்வைத மரபினைப் பொறுத்தவரையில் சூரியன், சந்திரன் இரண்டும் இவ்வாதத்தினை விளக்கும் வகை யில் எடுத்தாளப்பட்டன.

**"சட்டிக் குடங்களில் ஒன்று நசித்திட அதனுள் சல சந்திரன்**

**ஒட்டு முதற் சந்திரனோடு கூடும் ஒழிந்தவை கூடாவே**

**கட்டும் உபாதி நசித்திடு சீவன் காரண ஆன்மாவில்**

**கிட்டும் ஐக்கியம், உபாதி கெடாதவர் கேவலம் ஆகாரே"[13]**

சட்டி, குடம் முதலியவைகளில் ஒன்று உடைக்கப்படும் போது அதனுள் தெரிந்துகொண்டிருந்த பிரதிவிம்பச் சந்திரனானது தான் பொருந்துததற்குரிய மூல சந்திரனைச் சாரும். ஏனைய பாத்திரங்களில் தெரிகின்ற பிரதி விம்ப சந்திரர்கள் அங்ஙனம் ஏகமாகக் கூடாவாம். அதுபோலவே பந்தித்திருக்கும் அறியாமை நீங்கப்பெற்ற சீவனே தனக்கு ஆதாரமான பிரம்ம சொருபத்தில் ஐக்கியப்படும் உபாதி நீங்காத ஜீவன்கள் கைவல்யமாகிய ஏகத்துவ நிலையை உணரமாட்டார்கள் என்பதே இப்பாடலின் விளக்கமாகும்.

**"அகம் எனும் ஆன்மா பூரணம் ஏகம் அநேக விதஞ் சீவன்**

**அகமெனும் அந்தக் கரண உபாதிகள்"[14]**

**அவச்சேத வாதம்:**

பூரணத்தை கூறிட முனைந்தால் அக்கூறும் பூரணமே என்கிற தர்க்கத்தின் வெளிப்படுகையே அவச்சேதவாதமாகும். வரம்பற்ற வெளியை தடுப்புக்களையிட்டு சேதப்படுத்திச் சிறைப்படுத்த முனையும் போது அத்தடுப்புக்களால் அடைக்கப்பட்ட "வெளி" யானது சூழ்ந்துள்ள பெருவெளி யின் கூறேயன்றி வேறல்ல. தடுப்புக்கள் நீங்கும் போது ஏகத்துவமானது பரவெளியே என்ற உண்மை புலனாகிறது.

இதுபோலவே ஏகப் பொருளாகிய பிரம்மமாகிய ஏகாத்துமாவே உடல், மனம் முதலிய வரம்பிற்குட்பட்ட உபாதிகளால் தானும் எல்லைக்குட்பட்டதாக எண்ணத்தோன்றுகிறது.

பிரம்ம ஞானம் ஏற்படுகின்ற கணத்தில் பிரம்மத்தின் ஏகத்துவம் உணரப்படுகிறது. இதனையே அத்வைதிகள் அவச்சேதவாதத்தில் வெளி / ஆகாயம் என்ற எடுத்துக்காட்டின் மூலம் விபரிக்க முற்படுகின்றனர்.

வெளி / ஆகாயம் அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பிகந்தது. எங்கும் வியாபகமானது. எனவே அது மகாகாயம் (மகா ஆகாயம்) எனப்படுகின்றது. குடம், பானை, முதலிய உருவத்தடுப்புக்களில் உள்ளடங்கியுள்ள வெளி / ஆகாயத்தினை குடாகாயம் என்பர். அடிப்படையில் மகாகாயமும் குடா காயமும் வேறல்ல. பானை, முதலிய தடுப்புக்கள் உடைக்கப்படும்போது இந்த உண்மை தெளிவாகிறது. அதுபோலவே அவித்தையினால் ஏற்படும் உபாதிகள் நீங்கும்போது சீவன் பிரம்மம் என்ற வேறுபாடு நீங்கிய அத்வைத உண்மை உணரப்படுகின்றது.

உபாதிகளால் சூழப்பட்டிருப்பினும் சீவனின் தன்னியல்பு நிலையில் எத்தகைய கேடும் ஏற்படுவதில்லை. அதன் விகாரப்படாத தன்னியல்பு நிலை தொடர்ந்தும் பேணப்படுகிறது. இதனை குடத்தினுள் உள்ள வெளி / ஆகாயத்துக்கும் எந்த விகாரமும் ஏற்படாத தன்மையினை எடுத்துக்காட்டி அத்வைதிகள் விளக்குகின்றனர். குடத்தினால் சூழப்பட்டிருப்பினும் குடாகாயத்தின் தன்னியல்பில் எத்தகைய மாற்றமும் நிகழ்வதில்லை. அது உண்மையில் மகா காயத்தின் தன்னியல்பையே கொண்டுள்ளது. குடத்தின் சுவர்களால் ஏற்பட்ட தடுப்பு புறவயமானது, தற்காலிகமானது. அவித்தையால் தோன்றும் உபாதிகளால் ஆன்மாவிற்கு ஏற்படுவதும் இத்தகைய ஓர் தற்காலிக மறைப்பேயாகும், இதுவே சாஸ்வதமானதன்று.

இவ்வாறாக அவச்சேதவாதத்தினை கட்டமைத்துள்ள அத்வைதிகள் இதன் மூலமும் ஏகான்மைவாதத்தை தெளிவாக வலியுறுத்த முற்பட்டுள்ளனர்.

கைவல்ய நவநீதத்திலும் அவச்சேத வாதத்தின் பயில் நிலையை சில பாடல்களில் அவதானிக்க முடிகிறது.

**"கடமென்னும் உபாதி போனால்**
**ககனம் ஒன்றானார் போல**

**உடலெனும் உபாதி போன**
**உத்தரம் சீவன் முக்தர்"[15]**

**"விண் ஒன்றே மகாவிண் என்றும்**
**மேகவிண் என்றும் பாரில்**

**மண் என்ற கடவிண் என்றும் மருவிய**
**சலவிண் என்றும்**

**எண்ணு கற்பனை போல் ஒன்றே**
**எங்குமாம் பிரம்மம் ஈசன்**

**நண்ணும் கூடஸ்தன், சீவன் நான்கு**
**சைதன்யமாமே."[16]**

மேற்குறிப்பிட்ட அறுபத்தைந்தாம் பாடலில் தாண்டவராய சுவாமிகள் அவச்சேத வாதத்தினை சற்று அகலித்த பரிமாணத்தில் கையாண்டுள்ளார். பொதுவாகப் பிரம்மம் - ஜீவனின் வேறுபாடற்ற தன்மையினை விளக்குவதற்காகவே அத்வைத மரபில் அவச்சேதவாதம் கையாளப்பட்டது. ஆனால் பிரம்மம், ஈஸ்வரன், கூடஸ்தன், ஜீவன் என நான்கு கருத்தாக்கங்களை ஒரே தளத்தில் வைத்து விளக்குவதற்காக கைவல்ய நவநீதம் இதனைப் பயன்படுத்தியுள்ளது.

இவற்றுக்கிடையிலான வேறுபாடென்பது சற்றுச் சிக்கலானதும் நுண்ணியதுமாகும். உலகிற்கான காரணமாக ஈஸ்வரன் பார்க்கப்படுகிறது. அதாவது மாயையோடு தொடர்புபடுத்தி பிரம்மம் அறியப்படுகின்ற போது அது ஈஸ்வரன் எனப்படுகின்றது

இடம் (Space) போன்ற புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப்பரிமாணங்களுக்கு ஈஸ்வரனே காரணமாவதாயும் சில அத்வைதப் பிரிவினர் வாதிடுவர். மாயையில் பிரம்மம் பிரதிபிம்பிக்கின்ற பொழுது அது ஈஸ்வரனாகின்றது. அவித்தையில் பிரதிபிம்பிக்கின்ற பொழுது அது ஜீவனாகின்றது. இது பதார்த்த விவரணம் எனும் அத்வைதப் பனுவலின் கருத்தாகும். எவ்வாறாயினும் இதற்கு முரண்பட்ட சிந்தனைகளும் அத்வைதிகளிடையே உள்ளன. எடுத்துக்காட்டாக சம்ஷேப சாரீரத்தை எழுதிய அத்வைத ஆசான் ஒருவர் அவித்தையில் பிரம்மம் பிரதி பிம்பிக்கின்ற பொழுது ஈஸ்வரனாகும் என்றும் அந்தக்கரணத்தில் பிரம்மம் பிரதிபிம்பிக்கின்ற பொழுது ஜீவனாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்வைதத்தின் விவரணச் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த முக்கிய சிந்தனையாளர்களின் நிலைப்பாடு வேறொரு வகையில் அமைந்துள்ளது. இவர்கள் ஈஸ்வரனையும் ஜீவனையும் பிரம்மத்தின் பிரதிவிம்பம் "மூலமாதிரி" என்றும் கருதுவர்.[17]

அடுத்து ஜீவன் கூடஸ்தன் என்ற இரண்டு கருத்தாக்கங்களிடையிலான வேறுபாட்டை நோக்கலாம். கூடஸ்தன் என்னும் சொல்லிற்கு கூடம் அல்லது உச்சியில் விளங்குவது அல்லது உயரத்தில் இருப்பது என்பது நேரடியான பொருள் விளக்கமாகும். சங்கரரிற்குப் பிற்பட்டகால அத்வைதச் சிந்தனை மரபில் "கூடஸ்தன்'' பற்றிய பல்வேறு நிலைப்பட்ட கருத்து விளக்கங்கள் உள்ளன. இவற்றுள் பல ஒன்றிலிருந்து ஒன்று கடுமையான முரண்நிலை உடையன. எவ்வாறாயினும் கூடஸ்தன் தொடர்பான ஒரு மேலோட்டமான விளக்கத்தைப் பின்வருமாறு குறிப்பிடமுடியும்.

கூடஸ்தன் என்பது ஜீவனின் ஒரு நிலையேயாகும் உண்மையில் இது "சித்'' என்கிற உணர்வு நிலையாகும். இவ்வுணர்வு ஜீவனைவிட மேம்பட்டது. இதனை சாக்ஷி என்பர். இது ஜீவனுக்குள்ளேயே அமையினும் ஜீவனைவிட உன்னதமான நிலையாகும். இதனைப் பிரக்ஞை எனவும் வழங்குவர். இதுகாரண ஆற்றல் அற்றதாகும்.

எனவே பிரம்மம், ஈஸ்வரன், கூடஸ்தன், ஜீவன் என்கிற நான்கு பொதுமையான கருத்தமைவுகளையும் அத்வைத மரபு ஆழமாகச் சிறப்பித்து ஆராய்ந்துள்ளது. கைவல்ய நவநீத ஆசிரியரும் முற்குறிப்பிட்ட பாடலில் (பாடல் 65) இவை நான்கையும் அவச்சேதவாதத்தில் வைத்து ஒரு பாடலிலே விளக்கியுள்ளமை நயக்கற்பாலது.

ஆகாசம் ஒன்றாய் இருந்தும் அது உபாதியினால் மகாவிண் என்றும் மேகவிண் என்றும் கடஆகாசம் என்றும் அக்கடத்துள் வார்க்கப்படும் ஜல ஆகாசம் என்றும், நால் வகையாக வர்ணிக்கப்படுவதுபோல, ஏகமான சுத்தசைதன்யமே பிரம்மம் ஈஸ்வரன், கூடஸ்தன், ஜீவன் என நால்வகையாக அறியப்படுகிறது என்பதே அப்பாடலின் விளக்கமாகும்.

அவச்சேதவாதத்தினை அத்வைத மரபுக்கு அறிமுகஞ்செய்தவர் வாசஸ்பதிமிஸ்ரா ஆவார். (கி.பி. 840 - 900) இவர் நீங்கலாக ஏனைய அத்வைத சிந்தனையாளர்கள் அனேகர் பிரம்மம், ஈஸ்வரன், கூடஸ்தன், ஜீவன் ஆகிய நான்கையும் விளக்குவதற்கு பிரதிவிம்பவாதத்தையே எடுத்தாண்டுள்ளனர். ஆனால் கைவல்ய நவநீத ஆசிரியரான தாண்டவராயரோ தனது தனித்தன்மையை நிரூபிக்கும் விதத்தில் அவச்சேதவாதத்தில் வைத்து இந்நான்கு விடயங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். குறிப்பாக அவர் கையாண்ட எடுத்துக்காட்டுக்கள் கருத்தூன்றி நோக்கப்படவேண்டியவையாகும்.

மகாவிண் - பிரம்மம்

மேகவிண் - ஈஸ்வரன்

குடவிண் - கூடஸ்தன்

(குடத்துள் உள்ள ஆகாசம் / வெளி)

குடத்துள் ஊற்றப்பட்ட நீர்மூலக்கூறுகளிடையே உள்ள வெளி / விண் - ஜீவன்

இங்கே எடுத்தாளப்பட்டுள்ள உவமைகளில் வெளியின் சுயாதீனப்பண்பு இறங்கு வரிசையில் அமையும் வண்ணம் ஆசிரியர் செய்யுளமைத்துள்ளமை அவதானிக்கப்பட வேண்டியதாகும். இதன்மூலம் தாண்டவராயர் தான் விளக்கமுற்பட்ட நான்கு விடயங்கள் தொடர்பான நுட்பமான புரிதலுக்கு வழிதிறந்துள்ளார்.

கூடஸ்தன் என்ற சொல்லுக்குப் பதிலாகச் "சாட்சி" என்ற கலைச்சொல்லாடலும் கைவல்ய நவநீதத்தில் இடம்பெற்றுள்ளது. இது அத்வைத மரபில் "தத்துவசுத்தி" என்ற நூலில் மட்டும் இடம்பெற்ற ஒரு பதப்பிரயோகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**"குடவானும் பெரியவானும் கூடி ஒன்றாம் எப்போதும்**

**இடமான பிரமம், சாட்சி இரண்டும் எப்போதும்........"[18]**

**ஆபாச வாதம்:**

இதனைத் தோற்றக்கொள்கை என்பர். ஆதிசங்கரரின் முக்கிய சீடர்களில் ஒருவரான சுரேஸ்வரரே இக்கொள்கையைக் கட்டமைத்தார்.

ஆபாசம் என்பது போலி, போன்றிருத்தல் காட்சியளித்தல் என்ற பொருளில் வேதாந்தமரபில் வழங்குகிறது. நிறமேதுமற்ற பளிங்கு / ஸ்படிகத்தின் முன்பு எந்நிறப்பூவை வைத்தாலும் பளிங்கு அந்நிறமானதாக மாறுவது போன்று அவித்தையின் முன்னிலையால் பிரம்மம் கூடஸ்தனாகத் தோற்றமளிக்கிறது. இங்கே மலரில் உள்ள செந்நிறமும் பளிங்கில் தெரியும் செந்நிறமும் ஒருபடித்தானவை அன்று. மலரில் தோன்றும் செந்நிறம் மலரின் இயல்பாகும். அது மலரின் தற்கிழமைப் பொருளாகும். ஆனால் நிறமற்ற பளிங்கில் தெரியும் செந்நிறம் அவ்வாறானதன்று. அது பளிங்கிற்குப் புறவயமானது. இங்கே பளிங்கு மலரின் செந்நிறத்திற்குச் சாட்சியாக இருக்கிறதேயன்றித் தன்னியல்பு கெட்டு நிலைமாறிவிடுவதில்லை. அத்வைத மரபில் கூடஸ்தன் ஆகிய ஆன்மாவிற்கு சாட்சி என்ற பிறிதொரு பெயரும் வழங்குவது நினைவிற்கொள்ளத்தக்கது.

இவ்வாறாக அவித்தையால் பிரம்மம் கூடஸ்தனாகக் காட்சியளிக்கும் எதிர்மறை நிலையை விளக்குவதற்கு ஆபாசவாதம் சுரேஸ்வரரால் எழுத்தாளப்படினும் கைவல்யநவநீத ஆசிரியரோ ஆபாசவாதத்தினைப் பிறிதொரு வகையில் கையாண்டுள்ளார். களங்கமற்ற ஸ்படிகத்தின் முன்பு எந்நிறமுடைய பொருளை வைத்தாலும் அந்த ஸ்படிகமானது அந்நிறத்தைப் பிரதிபலிக்கும். ஆனால் அதே ஸ்படிகத்தின் முன் அதனை ஒத்த பிறிதொரு ஸ்படிகம் காண்பிக்கப்பட்டால் அது தனது பிரதிபலிக்கும் இயல்பு கெட்டு வேறுபாடு நீங்கி ஒன்றில் ஒன்றாகும். அதுபோலவே ஞானநிலையில் பிரம்மத்தினை உணர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா தன்னியல்பை உணரும். இவ்வாறாக ஆபாசவாதத்தினை நேர்நிலை உத்தியாகக் கைவல்ய நவநீதம் பயன்படுத்தியுள்ளது.

**"களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும்போது**

**விளங்கியதன் மயமாகி அபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்பமார்போல..........."[19]**

எனத் தொடரும் பாடலில் இதனை அவதானிக்க முடிகிறது.

**விவர்த்தகாரண வாதமும் -**

**சத்காரண விவாதமும்:**

சில காரணங்கள் காரியங்களாக மாறுகின்றபொழுது வேறுபட்ட இயல்புகளை ஏற்கின்றன.

உதாரணம்: பால் தயிராகும்போது தொடர்ந்து பாலாக அது நமக்குக் கிடைக்காது.

இதனை பரிணாம காரணமென்பர். ஆயினும் சில காரணங்கள் காரியங்களாக மாற்றம் கொள்ளினும் தமது இயல்பினை இழப்பதில்லை.

உதாரணம்: பொன்னைக்கொண்டு எந்த வகை ஆபரணத்தைச் செய்யினும் தன்னியல்பில் இருந்து பொன் மாறுவதில்லை. இதனையே விவர்த்த காரணமென்பர்.

பரிணாம காரணம்:- காரணம் காரியமாகின்ற போது மாற்றமுறும்.

விவர்த்தகாரணம் : காரணம் காரியமாகும் நிலையிலும் மாற்றமுறாது.

உலகத்தின் தோற்றப்பாட்டு நிலையை விளக்குவதற்கு அத்வைதிகள் விவர்த்த காரண வாதத்தையே கையாண்டனர். பிரம்மத்தின் தூய்மை கெடா இருப்பை நிலைநிறுத்துவதே இதன் பின்னணியில் உள்ள நோக்கமாகும்.

தூய்மை கெடா, மாற்றமுறா தன்னிருப்பு நிலையில் பிரம்மத்தை வைத்துள்ள அத்வைதிகள் அதனை நிறுவுவதற்குகந்ததாக விவர்த்த காரண வாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

ஆதிசங்கரரின் புகழ்பெற்ற "கயிற்றரவு" எடுத்துக்காட்டும் அதிலிருந்த விரிந்த விவர்த்த காரணவாதமும் அனைவராலும் அறியப்பட்ட ஒன்றேயாகும். சங்கரரிற்குப் பின்வந்த சுரேஸ்வரர், சக்வக்ஞர், வாசஸ்பதி மிஸ்ரா போன்றவர்களும் விவர்த்த காரணவாதத்தின் அடிப்படையை ஏற்றுக்கொண்டேயிருந்தனர். மாயையின் தொழிற்பாட்டால் பிரம்மம் பன்மைக் காட்சி வழங்குகின்றது இதன் அடிப்படையாகும் காரணம் உண்மை காரியம் பொய்

(கயிறு) —— (பாம்பு)

என்பது போல உலகத்தின் இருப்பு அனுபவ நிலையில் உண்மையாகவும், பொருண்மை நிலையில் பொய்யாகவும் அத்வைத வாதிகளால் விளக்கப்படுகிறது. கைவல்ய நவநீதத்திலும் விவர்த்காரணவாதம் பல சந்தர்ப்பங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**"அரவன்று கயிறு என்றாற்போல் ஆளன்று தறியென் றாற்போல்......."[20]**

**"கானல் நீர் கிளிஞ்சல் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனாவூர்**

**வானமை கயிற்றில் பாம்பு பீனமாம் தறிபு மானிப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரபஞ்சம் எல்லாம் பொய்யே.......”[21]**

**“நாருடு பணியாத் தோன்றல் நரனாகத் தறியில் தோன்றல்”[22]**

பிழையற்ற நேரிய அறிவு எழும் வரை கயிறு பாம்பாகவே தோன்றும். அதுபோலவே பிரம்மத்தில் உலகம் ஊன்றியுள்ளதை அறியும்வரை உலகம் உண்மையானதாகவே தோன்றும். இந்தக் கயிற்றரவு எடுத்துக்காட்டின் மூலம் இவ்வுலகம் என்றுமே பிரம்மத்தை ஒருதலைச் சார்பாகச் சார்ந்தே விளங்கும் என்பதையும் சங்கரர் அடையாளப்படுத்தியுள்ளார். பாம்பின் தோற்றம் என்பது என்றைக்குமே கயிற்றினது உண்மையினைச் சார்ந்ததாகவே உள்ளது. ஆனால், கயிற்றின் உண்மை பாம்பின் தோற்றத்தினைச் சார்ந்ததாய் ஆகாது. அதாவது கயிறு பாம்பினைச் சார்ந்ததாக ஆகாதது போன்றே பிரம்மம் என்றும் உலகினைச் சார்ந்தது ஆகாது. இதனையே காரண காரிய நிலையில் பொருத்திப் பார்க்கும் போது காரியமாகிய பாம்பின் இருப்பு காரணமாகிய கயிற்றை ஒரு தலைச் சார்பாக சார்ந்தமைந்தது எனலாம். அதாவது பொன்னின்றி வளையல், மோதிரம் போன்ற பொன்னாபரணங்களின் இருப்பு எப்படி சாத்தியமாகாதோ அதுபோலவே பிரபஞ்சத்தின் இருப்பும் பிரம்மத்தின் இருப்பாலன்றிச் சாத்தியமுறாது. இந்த அடிப்படையில் நோக்கும் போது அத்வைதிகளும் ஒரு வகையில் சத்காரணவாதம் பேசுபவர்களாகவே உள்ளனர்.

**“படமும் நூலும் போல் செய்த பணியும் பொன்னும் போல் பார்க்கில்**

**கடமும் மண்ணும் போல் ஒன்றாம் காரிய காரணங்கள் ..........”[23]**

என்ற கைவல்ய நவநீத பாடல் அடிகள் மூலமும் இதே சிந்தனை முன்வைக்கப்படுகின்றது. ஆடையும் நூலும் போலவும், ஆபரணமும் அதனைச் செய்த தங்கத்தைப் போலவும் காரிய காரணங்கள் இரண்டும் ஒன்றேயாகும் என்பதே இப்பாடலடிகளின் பொருளாகும்.

**மாயை:**

உலகைத் தோற்றம் என விவரிப்பதற்கு அத்வைதம் கனவுலகம், நனவுலகம், பரமார்த்திக உலகம் என மூன்று நிலைகளை எடுத்துரைத்துள்ளது.

உலகத்தின் “தோற்றம் பற்றிய அத்வைதக் கருத்தோட்டங்களில் “மாயை” பற்றிய சிந்தனை அதிக முக்கியத்துவம் உடையதாகும். மாயை உண்மையானதா அன்றிப் பொய்யா என்ற வினா எழுகின்ற சந்தர்ப்பங்களில்எல்லாம் அத்வைதிகள் தருகின்ற உத்தரங்கள் தனித்துவமானவையாகும்.

புலக்காட்சி நிலையில் உலகத்தின் தோற்றப்பாடு முழுமையாக நிராகரிக்கப்பட முடியாதுள்ளமையால் மாயை இல்பொருளுமன்று. அதேபோன்று இருமை இல்லாத ஆன்ம ஞானத்தின் முதிர்ச்சியில் மாயை தன் இருப்பிழந்து போவதனால் அது உண்மையானதுமன்று. எனவே அது “அல்பொருள்”, அநிர்வசனியம் (வசனங்களால் விவரிக்கப்பட முடியாதது.) அவாச்சியப் பொருள் என்பதே அத்வைதிகளின் நிலைப்பாடாகும். இதனைக் கைவல்ய நவநீதமும் பிரதிபலித்துள்ளது.

**“மாயையென்பது பிரம்மத்தின் வேறெ னின்**

**வஸ்துவும் இரண்டாமே மாயை என்பதும் பிரம்மமும் ஒன்றெனின் வஸ்துவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமே.”**[24]

எனச்சீடரால் எழுப்பப்படுகிற தர்க் கபூர்வமான வினாவிற்கு குருநாதர் கூறுகின்ற பதில-ாக அமைகின்ற மேல்வரும் பாடலில் இந்நிலைப்பாடு விளக்கப்பட்டுள்ளது.

**“அதனை இன்னதென்று உரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாகும்.**

**இது தனக்குள்ளது உடல்யான் உலகுமெய் எனும் அவர்உடையோர்கள்.**

**கதையிலாத பொய் வந்தது. இப்படியென்று கண்டபேர் இல்லை மைந்தா.”**[25]

“மாயை இத்தன்மையுள்ளதென்று வரையறுத்து உரைக்க முடியாமையால் அது அவாச்சிய உருவமாகும். (வாக்கியங்களால் விவரிக்க முடியாதது.) இத்தேகமே நான், கட்புலனாகின்ற இந்த உலகம் உண்மையானது என நம்புகிறவர்கள் எல்லோரும் மாயையி-னால் பீடிக்கப்பட்டவர்களே. அறிவற்றதான இந்தமாயை இவ்வாறுதான் தோன்றியது என்பதனைக் கண்டவர்கள் யாருமில்லை” எனப்பொருள் விளக்கமுறும் வகையில் குருநாதரின் பதில் அமைகிறது.

பொதுவாக மாயை, அவித்தை ஆகிய சொற்பதங்கள் அத்வைதத்தின் ஒரு பொருட் குறித்தவையாக வழங்கினாலும் நுண்மையாக நோக்குகின்ற போது அவித்தையை அக-வயமானதாகவும் மாயையை புறவயமானதா-கவும் கருதியுள்ளார். மேலும் மாயையுடன் தொடர்புடைய கூறுகளாக ஆரோபம், அத்தியாசம், கற்பனை, மித்தை, அஞ்ஞானம், மருள், அறியாமை என்பவற்றை கைவல்ய நவநீதம் சுட்டிக்காட்டியுள்ளது. இவையாவும் அடிப்படையில் ஒரு பொருளில் வேறு ஒரு பொருளை பாாத்தலுடன் தொடர்புடையவை என்பதனை

**“ஆரோகம் அத்தியாசம் கற்பனை ஆவ எல்லாம்**

**ஓர் ஓர் வஸ்துவினை வேறே ஓர் ஓர் வஸ்துவென உணர்தல்.........”**[26]

என்ற பாடலில் எடுத்துக்காட்டியுள்ளது.

மாயை ஆவரணம், விக்ஷேபம் ஆகிய இருபெரும் ஆற்றல்களை உடையது என்பது அத்வைத நிலைப்பாடாகும். ஆவரணம் என்பது உள்ளதை மறைத்தல் அல்லது மூடுதல் என்று பொருள்படும். பொருட்களின் உண்மைய இயல்பினை அறிய ஒட்டாமல் மயக்கத்தையும் மறைப்பையும் ஆவரண சக்தி ஏற்படுத்துகிறது.

கைவல்ய நவநீதத்தில் மாயையின் ஆவரண ஆற்றலானது மாரிகாலத்து இரவில் கவிகின்ற காரிருளின் இயல்புக்கு ஒப்பிடப்படுகின்றது.

**“ஊனிறை உயிர்கள் உள்ளத்துணர்விழி குருடாம் வண்ணம்**

**வான்நிலம் திசைகள் மூடும் மழை நிசி இருள்போல் மூடும்.”**[27]

மாரிகால இருள் கவிந்த இரவில் ஆகாயம் பூமியெங்கும் வேறுபடுத்தியுணர முடியாத வகையில் இருளே பரந்திருப்பது போல அகவயமான நிலையில் கூடஸ்தனாகிய ஜீவனுக்கும் அகவிருத்திகள் ஆகிய புத்தி, மனம் அகங்காரம் ஆகியவற்றிற்குமிடையே உள்ள வேறுபாடுகள் பிரித்தறிய இயலாது போகும். அதுபோலவே புறவயமான நிலையில் பிரம்மத்திற்கும் மாயையின் விருத்தியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறஉலகிற்கும் இடையிலான வேறுபாடு துலங்காது போகும். இதனையே

**"பூன்றமாம் பிரம்மத்துக்கும் புறத்துள விகாரங்கட்கும்**

**ஆன்ற கூடத்தனுக்கும் அகத்துள விகாரங்கட்கும்**

**தோன்றிய பேதம் சற்றும் தோன்றாமல் மறைந்து மூடும்.........."[28]**

எனத் தாண்டவராயர் குறிப்பிடுவார்.

மாயையின் மற்றைய ஆற்றலாகிய விக்ஷேபமோ ஒன்றை இன்னொன்றாகத் தோற்றமளிக்கச் செய்யும். தோற்றப்பாட்டை (projection) நிகழ்த்துவதே இதன் தனித்துவமாகும். தன்மாத்திரைகள் முதலிய தத்துவங்களின் தோற்றம் விக்ஷேப ஆற்றலால் நிகழும். இதனை "ஆரோபம்" என்பர். இது தூல ஆராபம் சூக்கும ஆராபம் என இரு வகைப்படும். இக்கருத்தமைவுகள் ஆதிசங்கரரால் கூறப்படவில்லை. பிற்கால வேதாந்திகளால் குறிப்பாக சதானந்தரால் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இதுவே பஞ்சீகரணம் என்ற பெயரில் கி.பி. 14இற்கு பின்னர் தோன்றிய வேதாந்த நூல்களில் முதன்மைப்படுத்தப்பட்டது.

கைவல்ய நவநீதத்திலும் இம்மரபு சிறப்பாகப் பின்பற்றப்பட்டுள்ளது. தத்துவ விளக்கப்படலத்தின் 29 - 42 வரையிலான பாடல்களில் இது மிக விரிவாக அலசப்பட்டுள்ளது.

## விடுதலையும் விடுதலைக்கான உபாயமும்:

அத்வைதம் கூறும் விடுதலையென்பது எங்கேயோ சென்று அடையப்படுவதன்று. அது ஒவ்வொரு கூடஸ்தனிடமும் உள்ளது. ஆனால் அவன் அதனை உணர்ந்துகொள்ள முடியாதுள்ளது.

அதாவது தானும் பிரம்மமும் வேறில்லை என்றுணரும் ஒருமை நிலையே அத்வைத ஞானமாகும். இதுவே விடுதலையாகும். தன்னை உணராத தன்மையாகிய அறியாமையே இதற்குத் தடைக்கல்லாகும். இதனைக் கடப்பதற்கு ஞானகுருவின் வழிகாட்டலை அவசியப்படுத்துகின்றார். தாண்டவராயர்.

**"ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கினானே"[29]**

**"பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்னமாக்கி**

**இணங்கிய குருவே என்னை இரட்சிக்க வேண்டும் என்றான்"[30]**

**"என்னுடைக் குருவாய் தோன்றும் ஈசனை இறைஞ்சினேனே"[31]**

ஞானாசிரியன் சீடனைப் அத்வைத ஞான முடையவனாக ஆக்குவதற்காக மானச நிலையிலும் பார்வையினாலும் அபயக் கரஸ்பரிசத்தினாலும் தீட்சையளிப்பதாக தாண்டவராயர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முறையே ஆமை, மீன், பறவை ஆகியவற்றை உவமானப்படுத்துகிறார்.

**"அன்னவன் சிசுவை ஐயன் ஆமை மீன் பறவை போலக்**

**தன்னகம் கருதி நோக்கித் தடவிச் சந்நிதியிருத்தி**

**உன்னது பிறவி மாற்றும் உபாயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றுண்டு சொல்வேன்.........”[32]**

ஆமையானது தன்னால் இடப்பட்டு மண்ணுள் புதைக்கப்பட்டிருக்கும் முட்டைகளை நினைவாலே பொரிக்கச் செய்யும் வல்லமையுடையது. அதுபோல ஞானகுருவும் சீடனின் உள்ளத்தினைப் பற்றியுள்ள மறைப்பு அகலும்படி சிந்தித்தல், இதுவே மானச தீட்சையாகும்.

மீன் தனது முட்டைகளைப் பார்வையாலே பொரிக்கவைக்கும். ஞானகுருவும் தனது தீட்சணியமான பார்வையால் சீடனின் அறியாமையை நீக்குவார். இதுவே நயன தீட்சையாகும்.

குருவானவர் சீடனின் தலையை அபயக்கரத்தினால் ஆசீர்வதித்து அவனது உச்சியில் ஸ்பரிசித்து ஞானமுத்திரை பதிப்பார். இதனைப் பறவையானது தனது முட்டைகளை வாஞ்சையுடன் இறக்கைகளால் தடவி அடைகாக்கின்ற செயலுடன் ஒப்பிடுகின்றார் தாண்டவராய சுவாமிகள்.

அத்வைதஞானம் எய்தப்படுகின்ற நிலையில் அறிபவன், அறியப்படுபவன், அறிவு என்கிற மூன்றும் (திரிசிய வஸ்துக்கள்) ஒன்றாகிவிடுகின்ற யதார்த்தம் ஏற்படும். தத்துவ ஆராய்ச்சியில் அதிக முதன்மை அளிக்கப்படுகின்ற மேற்படி மூன்று கூறுகளும் திரிபுடி நிலை கடந்து ஒரு புள்ளியில் சந்திக்கும். ஏனெனில் அத்வைத அனுபவம் என்பது ஆத்மா தானே பிரம்மம் என்று உணர்வதாகும். அத்வைத விளக்கப்படி பிரம்மம் என்பது பரிபூரணமான சுத்தசைதன்யம் அதாவது அறிவுமயமானது.

எனவே இதன் பிரகாரம்,

| (அறிபவன்) | (அறியப்படுவது) |
|---|---|
| ↓ | ↓ |
| ஆன்மா | பிரம்மம் |

அறியப்பட உதவும் கருவி (அறிவு)

இங்கே அறியப்படுபொருளாகிய பிரம்மமே அறிவாக அமைவதானாலும் தானே பிரம்மம் என்று (அதாவது அறிவென்று) உணர்வதே அத்வைத அனுபவம். ஆதலாலும் இம்மூன்று கூறுகளின் இருப்பும் ஒரு புள்ளியில் அமைகிறது.

பிரக்ஞானம் பிரம்மம்

தத் துவம் அஸி

அகம் பிரம்மாஸ்மி

ஆகிய மகாவாக்கியங்களின் உள்ளார்ந்த பொருண்மையும் இதுவேயாகும். இத்திரிபுடி ஞானத்தையே கைவல்யம் என்பர். இதனை கைவல்ய நவநீதம்

**“அத்துவித ஆனந்தம் வரும் திரிபுடி போம்”[33]** என்றும்.

**“அறிபடும் பொருள் நீ அல்லை.
அறிபடாப் பொருள் நீ அல்லை.**

**அறிபொருள் ஆகும் உன்னை
அனுபவித்து அறிவாய் நீயே”[34]**

என்று குறிப்பிட்டுள்ளது.

தன்னைப் பிரம்மமாக உணர்கின்ற நிலை அல்லது பிரம்மம் வேறு தான் வேறு என்கிற இருமைப்பாடு நீங்கிய நிலையே அத்வைத அனுபவமாகும்.

**“நித்தமும் அது நீயாகும் நீயது வாகும் என்னும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அர்த்தமும் அகண்டம் என்றே**
**அசிபத ஐக்கியம் காட்டும்."[35]**

என்ற பாடலில் தத்துவம் அஸி என்ற மகா வாக்கியப் பொருள் விளக்கமாக அத்வைத அனுபவத்தினை தாண்டவராய சுவாமிகள் எடுத்தாள்வது நோக்கற்பாலது.

**"பஞ்சமாம் குருவும் சொன்ன தத்துவ**
**வழிதப்பாமல்......**

**கொஞ்சமாம் இருப்பும் விட்டுக்**
**கூடஸ்தன் பிரம்மம் என்னும்**

**நெஞ்சமும் நழுவி ஒன்றாய் நின்ற**
**பூரணத்தைக் கண்டான்."[36]**

என்ற பாடலிலும் ஞானாசிரியன் வழிகாட்டலில் இருமை நிலை (கூடஸ்தன் வேறு பிரம்மம் என்ற) நீங்கிய பரிபூரண நிலை எய்தப்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக அத்வைதவேதாந்தத்தின் அடிப்படைகளைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்ற பனுவலாகக கைவல்ய நவநீதம் விளங்குகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தாண்டவராய சுவாமிகள், கைவல்ய நவநீதம் மூலமும் தெளிவுரையும், பாயிரச் செய்யுள் 06.
2. கந்தசாமி சோ.ந., இந்திய தத்துவக் களஞ்சியம்.
3. தாண்டவராய சுவாமிகள், மு.கு.நூ, பாடல் 25.
4. மேலது, பாடல் 75.
5. மேலது, பாடல் 04.
6. மேலது, பாடல் 246.
7. மேலது, பாடல் 215.
8. மேலது, பாடல் 107.
9. மேலது, பாடல் 81.
10. மேலது, பாடல் 10.
11. மேலது, பாடல் 11.
12. மேலது, பாடல் 12.
13. மேலது, பாடல் 147.
14. மேலது, பாடல் 146.
15. மேலது, பாடல் 106.
16. மேலது, பாடல் 65.
17. இராதாகிருஷ்ணன் கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, ப. 518.
18. தாண்வராய சுவாமிகள், மு.கு.நூ, பாடல் 82.
19. மேலது, பாடல் 126.
20. மேலது, பாடல் 45.
21. மேல்து, பாடல் 108.
22. மேலது, பாடல் 27.
23. மேலது, பாடல் 47.
24. மேலது, பாடல் 202.
25. மேலது, பாடல் 203.
26. மேலது, பாடல் 27.
27. மேலது, பாடல் 49.
28. மேலது, பாடல் 50.
29. மேலது, பாடல் 13.
30. மேலது, பாடல் 14.
31. மேலது, பாடல் 04.
32. மேலது, பாடல் 15.
33. மேலது, பாடல் 259.
34. மேலது, பாடல் 74.
35. மேலது, பாடல் 81.
36. மேலது, பாடல் 83.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலரின் நூலியல் சார்ந்த சைவமும் (Textual Saivism) பெண்களும்

**கலாநிதி மைத்திலி தயாநிதி**

இக்கட்டுரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ மிஷனரிமாரின் பிரசங்கங்கட்கு எதிராக முன்வைத்த நூலியல் சார்ந்த சைவம் (Textual Saivism) குறித்துச் சுருக்கமாக ஆராய்கிறது. யாழ்ப்பாணச் சாதிய அமைப்புக்கு அச்சுறுத்தல் விளைவிப்பதாக நாவலர் கருதிய கிறிஸ்தவ மிஷனரிமாரின் பிரசங்கங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவர் உருவாக்கிய நூலியல் சார்ந்த சைவத்தின் உள்ளார்ந்த அம்சமாக பெண்ணின் நடத்தையை கட்டுப்படுத்துதல் என்னும் கருத்தாக்கம் விளங்கியது என்பது இக்கட்டுரையின் பிரதான வாதமாகும். **பெண்ணின் நடத்தையை கட்டுப்படுத்துதல் கோட்பாடு ஒப்பீட்டளவிற்றான அர்த்தம் பொதிந்ததாக இருக்கும். பெண்கள் நாவலர் காலத்தின் முன்னர் பூரண சுதந்திரத்துடனும், அதிகாரத்துடனும் இருந்தனர் என்பது இக்கட்டுரையின் தொனிப்பொருளன்று. நாவலரின் நூலியல் சார்ந்த சைவம் பெண்களின் சமூக அந்தஸ்தும் செல்வாக்கும் முன்னர் இருந்ததை விடக் குன்றுவதற்கு வழி வகுத்தது என்பதையே இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.**

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ள, நாவலரின் எழுத்துக்கள் காணப்படும் மதம், சாதியம், ஆண்-பெண் சமூக உறவு நிலை (gender relations)[1] எனும் இம் மூன்று அம்சங்களுக்குமிடையிலான தொடர்பினை விளங்கிக் கொள்ளல் இன்றியமையாதது. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும், நடுப்பகுதியிலும் வங்காளத்தில் நடைபெற்ற சமூக சீர்திருத்த விவாதங்கள் பலவற்றின் மையப் பொருளாக பெண்கள் பிரச்சினை விளங்கியது,[2] ஆனால், பத்தொன்பதாம் நூற்றான்டில் ஏற்பட்ட யாழ்ப்பாணச் சைவ மறுமலர்ச்சி தொடர்பான கட்டுரைகளிலே பெண்கள் பிரச்சினை பற்றிய குறிப்பு அரிதாகவே காணப்படுகிறது. இதற்கு ஒரு முக்கிய காரணம் வங்காளத்தில் பெண் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் சமூக வழக்காறுகள் -சதி, குழந்தை திருமணம், விதவைகளைத் தனிமைப்படுத்துதல், குலின் பிராமண வர்க்கத்தின் பல்தார மணம் என்பன யாழ்ப்பாணப் பெண்களின் நிலை கிறிஸ்தவ மதப்பரம்பலுக்குச் சாதகமாய் இருந்தது எனும் கருத்தைத் தருகின்றன. குறிப்பிட்ட இக்காலகட்டத்தில் கருத்தியல் ரீதியாக தந்தை வழிச் சமூக கருத்துகளை நாவலர் யாழ்ப்பாணச் சமூகத்தில் வலுப்படுத்த முனைவதற்கு இது ஒரு காரணமாக அமைகிறது. யாழ்ப்பாண சாதிச் சமூக முறையின் அத்திவாரத்தை ஆட்டம் காண வைத்த மிஷனறிக் குழுக்களின் மதமாற்ற நடவடிக்கைகளை எதிர்கொண்டு போடத், தாய் வழிச் சமூக எச்சங்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகத்திலே, தந்தை இறைமைச் சமூகக் கருத்துகளின் செல்வாக்கினை அதிகரிப்பது அவசியம் என்று நாவலர் எண்ணினார். தந்தை இறைமைச் சமூகத்தைப் பிரதிபலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ சமயத்திற்கு நிகராக அவர் முன்வைத்த நூல் சார்ந்த சைவம், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டதுடன், யாழ்ப்பாணத்திற் பிரபல்யமாக இருந்த பெண் தெய்வங்களை சிவனின் மனைவியாகக் கருதப்படும் சக்தியுடன் அடையாளப்படுத்தி, பெண் தெய்வ வழிபாட்டை சிவ வழிபாட்டுடன் ஒருமைப்படுத்தியது; அத்துடன், தாய் வீட்டில் அல்லது தாய்வீட்டுக்கு அண்மையில் வசிக்கும் வழக்கம் மூலம் திருமணத்தின் பின்னரும் தாய் வீட்டுடன் மிக நெருங்கிய உறவினைப் பேணியவர்களும், அசையா சொத்தான நிலவுரிமை மூலம் குடும்பத்தில் சொல்வாக்குச் செலுத்தியவர்களுமான பெண்கள் மீது கணவர் முழுமையான அதிகாரம் செலுத்தவும் அங்கீகாரம் வழங்கியது. பெண் தெய்வங்கள் தம் முக்கியத்துவம் இழந்தமைக்கும், பெண்களின் சமூக அந்தஸ்து குன்றுவதற்குமிடையே நேரிய தொடர்புண்டு எனுங் கருத்து இக்கட்டுரையின் அடிநாதமாக அமைந்துள்ளது.

புரட்டஸ்தாந்து மதப் பிரசாரகர்களின் செயற்பாடுகளுக்கு எதிரான நாவலரின் பல் வேறு முயற்சிகள் போராட்ட முனைப்புடன், தேவையெனில், உயிர்த்தியாகமும் செய்யத் தயங்காத உறுதியுடன், முன்னெடுக்கப்பட்டன. சைவ தூஷண பரிகாரம் எனும் தன் நூலின் முன்னுரையில் நாவலர் இவ்வாறு கூறுகிறார் (பக்கம் 5, 13).

“சிவனொருவரே பரமபதியென்றும், சைவமே சற்சமயமென்றும் துணிந்த சைவர்களாகிய நாங்கள், மேற்கூறியவாறே இந்தப் பாதிரிப் புல்லர்கள் செய்யும் சிவதூஷணம் சிவ சாஸ்திர தூஷணம், சிவசாரிய தூஷணம் முதலிய அதி பாதகங்களைக் கண்டும் அவர்களைக் கண்டியாது மௌனமாகவிருத்தலும், அவர்களால் ஆரோபிக்கப்படும் தூஷணங்களை சைவ நூலுணர்ச்சி சிறிதுமின்மையால், மெய்யென்று மயங்கி அவர்களுடைய கிறிஸ்துமதப் படுகுழியிலே சிலர் வீழ்ந்து கெடுதலைக் கண்டும் அத்தூஷணங்களைப் பரிகரித்துச் சைவத்தின் மகிமையை உபதேசித்துக் கிறிஸ்து சமயத்தை நிராகரியாது வாளா விருத்தலும், அதிபாதகமேயாகும்..... இனி, இவ்வரசர்களால் (பிரிட்டிஷ் அரசினர்) நீர்க்குமிழிப்போல நிலையிலலா ததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீது வருமெனினும் வருக; நிலையுள்ளதாகிய ஆன்மலாபத்தின் பொருட்டு பிராணத் தியாகம் பண்ணியும், சைவ ஸ்தாபனம் பண்ணுதலே அத்தியாவசியகம்.”

கிறிஸ்தவ மிஷனறி குழுக்களிற்கு எதிரான போராட்டம் உயர் சாதியினரால் சமய ஆசாரம், சாதியாசாரம் இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாக இருந்தது. கிறிஸ்தவ சமய விருத்திக்கும், சமய ஆசாரம், சாதியாசாரம் கெடுவதற்குமிடையில் காரண -காரியத் தொடர்பினை நாவலர் கண்டார். சமய, சாதி ஆசாரங்களைக் கடைப்பிடித்தொழுகும் உயர் சாதி ஆண்பாலார், குடும்பத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்டும் வல்லமை கொண்டோராய் இருத்தல் வேண்டும் என்று எதிர் பார்த்தார். தங்கள் மனைவியர்கள் செல்வழியே அடங்கி ஒழுகுவித்தல் ஆண்மை; தங்கள் மனைவியர் செல்வழியே தாங்கள் பயந்து நடுங்கி ஒழுகுதல் பேடிமை, என்று ஆண்மை பேடிமை எனும் கருத்துகளுக்கு வரைவிலக்கணம் கொடுக்கின்றார் (ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, 82). இது பிரமசரிய விரதம் அனுஷ்டித்த அவர் பெண்கள் தொடர்பில் கொண்டிருந்த பொதுவான கருத்தின் வெளிப்பாடாகும். அவர் பெண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசமானனான ஆண் மகன் இட்ட வேலைகளைச் செய்யும் கூலியாள், அடிமை என்பவர்களிடமிருந்தும், அவனின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் மாடு, கழுதை, குதிரை எனும் விலங்குகளிலிருந்தும் பெரிதும் வேறுபட்டவர்களாய்ப் பார்க்கவில்லை (நான்காம் பாலபாடம், 70-71). அத்துடன், கிறிஸ்தவ மிஷனறிமார் மதமாற்ற நடவடிக்கைகளின்போது பெண்கள் மீது விசேட கவனம் செலுத்தினராதலின், பெண்கள் தம் சுயசமயச் சூழலிருந்து பிறழாதிருக்க, ஆண்கள் தமதாதிக்கத்தில் அவர்களைக் கொண்டு வருதல் என்பது அவசியம் என்றும் நாவலர் கருதியிருத்தல் வேண்டும்.

கிறிஸ்தவ மதப் பரம்பலுக்குத் தடையாக இருந்த காரணிகளுள் ஒன்றாகக் கூறப்படுவது அக்கால யாழ்ப்பாணப் பெண்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்து நிலையாகும். பெண்கள் வீட்டுக்குள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தனர் என்றும், அவர்களைத் தனிமைப்படுத்தும்படியாகவே வீடுகளின் அமைப்பு இருந்தது என்றும், மிஷனறிமார் பெண்களை அணுக இயலாதிருந்தது என்றும் அவர் கூறுகிறார்.

The Cloistered woman in the interior of the house that the missionary on rare occasions saw is to a Hindu a protected womb as sacred as the womb in the inner sanctum of the Hindu temple, and such protection from the disordering forces it is beleved, brings great blessing to the family, including the birth of many sons.[3]

இது எவ்வாறாயினும், நாவலரது எழுத்துக்களும், வீடுகளில் முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர் எனும் கருத்தை மறுதலிக்கின்றன. பூப்பெய்திய பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகள் இருப்பினும், பூப்பெய்தி மிகச் சில வருடங்களிலே திருமணம் நடைபெறுவதால் அக் கட்டுப்பாடுகள் திருமணத்தின் பின்னர் கடைப்பிடிக்கப்படுவது இல்லை. பெண்கள் வீட்டில் சமை யல், குழந்தை பராமரிப்பு என்பவற்றை மேற்கொண்டதுடன், தோட்டத்தில், வளவில் வேலை செய்வது, சந்தைக்குச் சென்று பொருட்கள் வாங்குவது, விற்பது என்பவற்றையும் மேற்கொண்டிருந்தனர். சில சமயங்களில் உயர்சாதிப் பெண்டிர் கூட வருமானம் கருதி மாவிடித்தல், நெல் குற்றுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். கோயில் விழாக்களிலும் பெருமளவில் கலந்து கொண்டனர். நாவலர் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கும் கந்த புராணத்தில் பரிச்சயம் உண்டு என்று கூறுவதால் ஆலயங்களில் நடைபெற்ற கந்த புராண படனங்களிலும் பெண்கள் கலந்து கொண்டனர் என்று ஊகிக்கலாம். அத்துடன் அம்மன் ஆலயங்களிலும் வேறு ஆலயங்களிலும் ஆகம வழிபாடில்லாத வழிபாட்டு முறைகளில் (பொங்கல், மாவிளக்கிடல் முதலியன) பங்கேற்றனர். மேலும், வெள்ளைத்தோல் கொண்ட பிற மதத்தைச் சார்ந்த அந்நிய தேச போதகப் பெண்டிரை அவர்கள் சந்திப்பதற்கும், அவர் போதனைகள் கேட்பதற்கும் ஆடவர் பெருந் தடையாக இருந்ததாகத் தெரியவில்லை. இது பற்றி உடுவில் பெண்கள் செமினறி தாபித்த ஹரியட் வின்ஸ்லொவின் குறிப்பேட்டில் எதுவும் காணப்படவில்லை. மாறாக, கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த ஆண்கள், மதமாற்றம் செய்யப்படாத மனைவியாரால் அல்லற்பட்டமையை அவர் குறிப்பிடுகிறார். சுதேச பைபிள் போதகர்கள் தமது குறிப்பேட்டில், வீடுகளில் சென்று பைபிள், துண்டுப் பிரசுரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கும்போது ஆண்களுடன் பெண்களும் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். பெண்கள் தனிமைப்படுத்தப்படாமை, பல்வேறு கரும நிமித்தம் அவர்கள் வெளியே சென்று வரக் கூடியதாக இருந்தமை என்பன ஹூல் அவர்கள் கோடிட்டுக் காட்டிய இந்து மதப் பெண்கள் கோட்பாட்டைத் தவிர, இன்னொரு கருத்துக் கோட்பாடும் யாழ்ப்பாணத்தில் நிலவிற்று என்பதைச் சுட்டி நிற்கின்றது.[4]

இந்து மத சிந்தனை இயலுக்குப் புறம்பாக ஒரு சுதேசிய சிந்தனையியல் இருந்தது என்பதற்கு ஆதாரமாயுள்ள ஒரே ஒரு ஆவணம் தேச வழமைச் சட்டத்தொகுப்பு. டச்சுக்காரர்களினால் 1807ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்ட இச் சட்டக் கோவை யாழ்ப்பாண மக்களின் காணி உரிமை தொடர்பான பல வழக்கங்களைப் பிரதிபலிக்கின்றது. சமஸ்கிருத தர்மசாஸ்திரங்கள், ரோமன் டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம் என்பவற்றின் தாக்கங்களை இச் சட்டக் கோவையிடத்துக் காணக்கூடியதாகவிருப்பினும், அது பெண்கள் சமூகத்தில் செல்வக்குள்ளவர்களாகத் திகழ்ந்திருக்கக் கூடிய நிலைமையினையும் காட்டுகிறது.[5]

தேச வழமைச் சட்டம் நில உரிமையில் பெண்களுக்கு முதலிடம் வழங்குகிறது. பெண்ணுக்குத் திருமணத்தின் போது அல்லது அதற்கு முன்னர் வழங்கப்படும் நிலம் முதலிய சொத்துக்கள் பெண்ணின் தனிச் சொத்தாகக் கருதப்படும். மேலும், விசேட சந்தர்ப்பங்களில் மட்டுமே - சகோதரிகள் இல்லாவிடத்து, அல்லது அவர்களின் திருமணம் பூர்த்தியுற்றவிடத்து - ஆண்கள் சொத்துக்குரிமையுடையவர் ஆவர். பொதுவாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புத்திரிகள் புத்திரரைவிட சற்றுக் கூடுதலாகவே சொத்துக்கு உரிமை உடையவர்கள். பெண் சொத்துக்கள் தாய் வழியாகவே வழங்கும். அதைவிட தேச வழமைச் சட்டத் தொகுப்பு பெண் தலைமையைக் கொண்ட குடும்பங்களையும், விதவைகள் மறுமணத்தையும் அங்கீகரிக்கிறது. தேசவழமையுடன் இணைத்து யாழ்ப்பாணப் பூப்புனித நீராட்டுச் சடங்குகளை நோக்கும் போது, பெண் நிலத்துடன் தொடர்புடைய வளாயும், செழுமை, வளப்பம், மங்கலம் என்பதன் சின்னமாகவும் திகழுவதை காணலாம். பெண் வயதுக்கு வந்த பின்னர் தாம் திருமணம் செய்யும் வழக்கம் இருந்ததால், பிராமண சமூகத்தினரிடம் காணப்பட்ட பாலிய விவாகம் அல்லது குழந்தை திருமணம் யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை என்பது குறிப்பிடப்படத்தக்கது. இந்தக் குழந்தைத் திருமணமும், விதவை விவாக மறுப்பும், யாழ்ப்பாணப் பெண்ணின் ஒழுக்க நெறியாக நாவலர் கூறும் பதிவிரதாதர்மத்தின் தீவிரத்துவத்தின் வெளிப்பாடுகளாகும்.

மிஷனறி ஆவணங்கள் நிலவுரிமை மூலம் பெண் குடும்பத்தில் செலுத்திய செல்வாக்கினை கிறிஸ்தவ மதமாற்றத்திற்குச் சாதகமானதொரு காரணியாகக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில மேற்கோள்கள் வருமாறு:

Notwithstanding the intellectual degradation of women and the badge of social inferiority imposed upon them the customs of the Hindoos in Jaffna in relation to marriages and dower, has invested their females with an authority and control over property which goes far towards restoring them , in practice and in reality, to that position and influence from which ignorance



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and prejudice have displaced them.. .[6]

In the women's hands is the key to the evangelization of Jaffna. Nearly all the property is written in their name in the dowry deeds; and partly for this reason, and partly because of their natural intelligence, the women largely control the land. It is only by reaching them that the household, the unit and prime factor of society, is secured. (Methodist Episcopal Church, Women's Foreign Missionary Society, 1880, 175)

சொத்துரிமையும் கிறிஸ்தவ பாடசாலைக் கல்வியும் பெண்களை இலகுவாக மத மாற்றம் செய்வதற்கு வழி வகுத்தன.

Owing to the peculiar dowry system of Jaffna, the women of Ceylon hold a position of great power and influence, while the absence of Zenana life (the customs of child -marriage and perpetual widowhood are not prevalent as in India) and the wide prevalence of education render the women accessible and susceptible to Christian efforts.

(Annual report - American Board of Commissioners for Foreign Missions 1881, Volumes 71-74)

மேலும், 1886ஆம் ஆண்டுப் பத்திரிகையில் வெளியான செய்தி யொன்றினைப் பற்றிக் கருத்து வெளி யிடுகையில், தேசவழமை காட்டும் முரண் கருத்துநிலைப் பண்பாட்டில் ஊறிய பெண்கள் மறு பேச்சின்றிக் கணவன் ஆணைக்குக் கீழ்ப்படிதல் எனும் கருத்தினை, குடும்ப கௌரவம், குடும்ப ஒற்றுமை குறித்து ஏற்றுக் கொள்ளும் உளப்பாங்கில் இருந்ததாகத் தெரியவில்லை என்று திருச்சந்திரன் கூறுகின்றார்.[7] ஆனால், நாவலரின் ஆகம சைவக் கோட்பாடு இந்து மத சிந்தனைக்கு இயைவாக, பெண்களை ஆண்களின் கட்டுப்பாட்டில் இயங்குபவர்களாக மட்டும் பார்க்கிறது.

நாவலர் கண்ட சைவம் முற்று முழுதாக நூல்களை மையமாகக் கொண்டிருந்தது. பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகளை எல்லாம் ஒன்றுபடுத்தும் அவரின் நூலியல் சார்ந்த சைவம் யாழ்ப்பாணத்தில் இதற்கு முன்னர் நிலவவில்லை. நாவலர் சைவ சித்தாந்த மரபினர் என்று கொள்ளினும், அது ஆகம சைவ சித்தாந்த மரபு, தமிழ் சைவ சித்தாந்த மரபன்று என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். தமிழ்ச் சைவ சித்தாந்த மரபினை வடமொழிச் சைவாகம சித்தாந்த மரபிலிருந்து வேறுபடுத்தியே நாம் பார்த்தல் வேண்டும்.[8] சைவ குரவர்களின் பக்தி இலக்கியங்களினை முன்னோடியாகக் கொண்ட தமிழ்ச் சைவ சித்தாந்த மரபு பர முக்திக்கு வழியாக ஞானத்தையே கருதுகிறது என்பதுடன், அந்த முக்தி நிலையில் ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலத்தல் பற்றியும் அது பேசுகிறது. ஆனால், வடமொழிச் சைவ சித்தாந்த ஆகமங்கள் கிரியை மார்க்கத்தினை முக்தி மார்க்கமாகக் கருதுவதுடன், அம்முக்தி நிலையில் சிவனும், ஆன்மாவும் வேறு வேறாகவே நிற்கும் என்று கொள்கின்றன. மேலும், இவ்வாகமங்கள் தனி நபர் ஒருவர், சிவனைத் தன் சொந்த நன்மையின் பொருட்டு ஆலயத்தில் சைவாசாரியரால் செய்யப்படும் பூசை பற்றியும் பேசும்.

நாவலரின் ஆகமசைவம் கோயில் வழிபாட்டை மையமாகக் கொண்டது. பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு பெண் தெய்வ வழிபாடு, வாமாசார கிரியை முறைகள், பலியிடுதல், கிராமிய கோவில்களில் இயற்றப்பெறும் ஆகம மரபு சாராத கிரியை முறைகள் யாவற்றையும் புறக்கணிக்கின்றது. நாவலர் பெரிதும் அனுசரித்த ஆகம முறையிலான ஆலய வழிபாடு என்பது ஆசாரம், தீண்டாமை எனும் பிராமணிய கொள்கைகள் அடிப்படையில் அமைந்திருப்பதால், உயர் சாதியி-னர் ஏனையோர்களைத் தமக்குக் கீழே வைத்திருத்தலையும், ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தலையும் கருத்தியல் ரீதியாக நியாயப்படுத்துகிறது

ஆகமங்கள் அடிப்படையாக வைத்து, நாவலர் சைவசமயிகள் எனில் அவர்க-ளின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்று வலியுறுத்துகிறார். சிவனைத் தலை வனாகக் கொண்ட கடவுளார் குடும்பத்தை "மாதிரித்" தந்தை இறைமைக் குடும்பமாகக் காட்டுகின்றார். பெண் தெய்வங்கள் சிவனின் சக்தியின் அம்சம்; முருகன், பிள்ளையார், வைரவர், வீரபத்திரர் எனும் தெய்வங்கள் அவரின் புத்திரர்கள்; இவர்களுக்குச் செய்யும் வழிபாடு சிவனுக்குச் செய்யும் வழிபாடே என்று சிவ-னின் முதன்மைத்துவத்தை நிலைநாட்டுகிறார். "பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவ சமயம் ஆகாது. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றாவது கொள்வது சிவதுரோகம்" என்று கூறுகின்றார் (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, பக்கம் 77). மேலும், அவர் ஆகம முறையில் அமைந்த ஆலய வழிபாட்டு முறைகளை மட்டுமே அங்கீகரிக்கின்றார். இது தொடர்பில் நல்லூர் ஆலய முகாமைத்துவத்துடன் பெருங்கருத்துவேறுபாடு அவருக்கு எழுந்தது. ஆகம வழிபாட்டுக்கு உட்படுத்தப்படாத தெய்வங்களை - உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகள், காடன், மாடன், சுடலை மாடன், காட்டேறி, மதுரை வீரன், கருப்பன், பதினெட்டாம் படிக்கருப்பன், சங்கிலிக் கருப்பன், பெரிய தம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி (ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, பக்கம் 78)- வணங்குவதை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

அரசத்துவம் (Kingship) எவ்வாறு கோயிற் கிரியை மூலம் அங்கிகரிக்கப்பட்டதோ அவ்வாறே சைவ உலகில் மையமாகக் கோவிலை நிலை நிறுத்திய, பல்வேறு வழிபாடுகளை ஒருமைப்படுத்திய நாவலரின் சைவக் கொள்கை ஆகம கோயில் ஆதரவா-ளரான வேளாளரின் மேலாதிக்கத்தை உறுதி செய்தது. அதுமட்டுமன்றி, மாமிசம் உண்ணாத, மதுபானம் அருந்தாத வேளா-ளரை இருபிறப்பாளர்களுள் ஒருவராயும் உயர்த்தியது. சைவர்கள் சாதியாசாரத்தைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும் என்பது நாவலர் வலியுறுத்தும் முக்கிய விடயமா-கும். தாழ்ந்த சாதியினரின் தொடர்பு உயர் சாதியினருக்கும், அவர் வீடுகளுக்கும், ஆலயங்களுக்கும் தீட்டை உண்டாக்கு கின்றது என்ற நம்பிக்கை சாதியாசாரத்தின் அடிப்படை. ஆகமக் கோயில்கள் சமூகத்தின் சாதி எல்லைகளைப் பேணுவதில் முக்கிய இடம் வகிக்கின்றன இவ்வாறு சாதியையும், மதத்தையும் இணைத்தல் மூலமாக நாவலர் கிறிஸ்தவ மிஷனறிமார் மூலமாகவும் 1844 ஆம் ஆண்டின் அடிமை எதிர்ப்புச் சாசனம் மூலமாகவும் ஆட்டம் கண்டிருந்த சமூகத்தின் கட்டுப்பாடான பிரிவினர்களை (orthodox) வலுப்படுத்துகிறார்.

நாவலரின் பெண்கள் தொடர்பான கருத்துகளை பத்தொன்பதாம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாடத் தொடங்கிய சமூக அமைப்பின் பின்னணியில் வைத்தே நோக்க வேண்டும். சமய, சாதி ஆசாரங்களின் தூய்மையும், ஸ்திரப்பாடும் பெண்களின் நடத்தையிற் தங்கியுள்ளது. எனவே, பெண்களை ஆண்கள் கட்டுப்படுத்துவது அவசியம் என்று நாவலர் கருதினர். பெண்களின் நன்நடத்தை குறித்து நாவலர் பேசுவது தந்தை இறைமைச் சமூகக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வடமொழிப் பிராமணிய நூல்களின் அடிப்படையிலேயாகும். ஆண்களின் அதிகாரத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும் தம்மை உட்படுத்திக்கொண்டு, பொது இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளும் பெண்கள் சமூக மரியாதைக்குரியவர்கள் என்றும், ஆண்துணையை உதறித் தள்ளுபவர்களும், பொது இடங்களுக்குச் சென்று வருபவர்களுமான பெண்கள் சமூகத்தின் மதிப்பைப் பெற அருகதை அற்றவர்கள் என்ற கருத்தும் அவர் கட்டுரைகளின் காணப்படுகின்றன. பெண்கள் பொது இடங்களில் காணப்படுவதும், அயலவர் வீடுகட்குச் சென்று வருவதும் சமூகத்தின் ஒழுக்கம் சார்ந்த விழுமியங்களைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. எனவே, மூன்று வகையான பெண்கள் ஆண்களின் ஒழுக்கம் குன்றுவதற்கு காரணமாய் இருக்கின்றனர் என்று நாவலர் கூறுகின்றார் (அ) தேவ தாசியர் (ஆ) பைபிள் பெண்கள் என்று பொதுவழக்கில் கூறப்படுபவர்கள். இவர்கள் வீடுவீடாகச் சென்று வீட்டிலுள்ள பெண்களுக்கு பைபிள் வாசித்து விளக்கமளிப்போர் (இ) திருவிழாக் காலங்களில் ஆலயங்கட்குச் செல்லும் பெண்கள். பெண்களை திருவிழாவுக்குச் செல்லவிடாது தடுத்து வைத்திருக்கும் வல்லமை ஆண்களுக்கு வேண்டும் என்பது நாவலர் கருத்து.

பெண்களின் நடத்தையை கட்டுப்படுத்தும் தந்தை இறைமைச் சமூகக் கருத்துக்களை வலுப்படுத்தும் நோக்குடன் பிராமணிய தர்மசாஸ்திரக் கருத்துக்கள் பலவற்றைத் தாம் எழுதிய பாடப்புத்தகங்களில் நாவலர் புகுத்தினார். மனு நீதி சாஸ்திரத்தின் அடிப்படையில், பெண்கள் ஒருபோதும் சுதந்திரமானவர்கள் அல்லர் என கற்பிக்கின்றார். "பெண்கள் இளமைப் பருவதிலே பிதாவினாலும், யௌவனத்திலே கணவனாலும், மூப்பிலே புத்திரனாலும் காக்கத் தக்கவர் ஆகையால் ஒருபோதும் பெண்கள் சுவாதீனரல்லர்." (நாலாம் பாலபாடம், பக்கம் 131) மேலும், பெண்கள் சுதந்திரமாகச் சிந்திக்கவோ, செயற்படவோ அருகதை அற்றவர் என்றும் அவர்கள் விவாகம் செய்யும் முன் பெற்றோராலும், விவாகஞ் செய்தபின் கணவனாலும் கற்பிக்கப்பட்டபடியே நீதி வழுவாமல் ஒழுக வேண்டியவர்கள் என்றும் கூறுகின்றார். ஆண்களின் அதிகாரத்தை மறுதலிக்கும் பெண்டிர் தந்தை, கணவன் எனும் இரு ஆண் வம்சாவளியினர்க்கும் வசை தேடுபவர்கள் என்பது அவர் கருத்து. நாவலர் யாழ்ப்பாணச் சமூகத்தை சமஸ்கிருதமயப்படுத்தல் எனும் கருத்திட்டத்தின் கர்த்தாவும் தீவிர செயற்பாட்டாளருமாவார்.

சுதேச வழக்கத்திற்கு முரணான பல கோட்பாடுகளை நாவலர் தனது பாடநூல்களில் அறிமுகப்படுத்துகின்றார். திருமணத்தின் பின்னர் புக்ககம் சென்று வாழும் வழக்கம் அதிகமற்ற யாழ்ப்பாணச் சமூகத்தில் திருமணமான பெண்ணின் ஒழுக்கத்தினைப் பேணுவதற்கு உகந்ததொரு மார்க்கமாக புக்கக வாழ்க்கையை நாவலர் சிபார்சு செய்கிறார். "அவள் இரவினும் பகலினும் சற்றேனும் அயலாரோடு பேசாதிருக்கும்படி மாமியார் முதலானவர்கள் அவளைக் காக்க கடவர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பக்கம் 136). "குல மகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்" என்று பதிவிரதா தர்மத்தினை உயர் குணநலனாகப் பெண்களுக்கு எடுத்துக் கூறுகின்றார். விதவை மறுமணத்தை அங்கீகரியாது விடுவதுடன், பிராமண விதவைகளின் வழக்கங்களை கைக்கொள்ளுமாறும் அறிவுறுத்துகிறார். பெண்கள் தமக்கு விதிக்கப்பட்ட ஒழுக்க விதிகளை மீறும்போது, நரகத்தில் உழல்வதுடன், மறு பிறவியில் விலங்குப் பிறப்பு அடைதல், பேயுருக் கொள்ளல் என்பவற்றுடன், இம்மையிலும், மறுமையிலும் பல்வித நோ யாலும், வறுமையாலும் வருந்துவர் என்று கூறுகிறார்.

நாவலர் தந்தை இறைமைச் சமூகக் கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாகச் சிரார்த்தக் கிரியையினையும் நோக்குகிறார். கட்டாயம் செய்யப்பட வேண்டியது என நாவலர் வலியுறுத்தும் சிரார்த்தக் கிரியை ஆண் வழிச் சமூக அமைப்பினை நிலை நிறுத்தும் ஒரு கிரியையாகும். பெண்கல்வி என்ற கருத்து நாவலருக்கு உடன்பாடானது எனினும், அக் கல்வி பெண்களின் வீட்டுப் பணியுடன் தொடர்புடையதாக மட்டுமே இருத்தல் வேண்டும் என்று கருதுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆண்களின் ஆதிக்கத்திற்குச் சவால் விடுபவர்களாக எழுத்தறிவு பெற்ற பெண்கள் இருக்கக் கூடாது என்பது நாவலர் கருத்து. மூன்றாம் பாலபாடத்தில் பெண்கல்வி என்ற பாடத்தின் இறுதியில் இவ்வாறு கூறுகின்றார்:

ஒரு மகாராசாவின் ஆளுகைக் குட்பட்ட மனிதர்கள் எவ்வளவு புத்தி சாதுரியமுடையவர்களாயிருந்தாலும், அந்த இராசாவின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடத்தல்போல, சுய அதிகாரம் என்பது எப்பொழுதும் இல்லாத பெண்பாலர்கள் எவ்வளவு படித்தவர்களாயும் புத்தியுள்ளவர்களாயுமிருந்தாலும், தாங்கள் நாயகர்களுக்கும் மற்றை ஆண் பாலகர்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கி ஒழுகு நற்குணமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இவ்வாறு, ஆண்பாலார்க்கடங்கிய பெண்ணே நாவலரின் நூலியல் சார்ந்த சைவத்தில் இலட்சியப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள். இத்தகையதொரு பெண் கிறிஸ்தவ மதத்துள் புகவோ, சாதி சமயாசாரங்களைக் கைவிடவோ துணியாள் என்பது அவர் கருத்து.

இறுதியாக, எனது கட்டுரையின் வாதத்தினைச் சுருக்கமாகத் தருகிறேன்: புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ பாதிரிமார்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடும்பங்களில் பெண்கள் வகித்த செல்வாக்கு மிக்க நிலை கிறிஸ்தவ மத போதனைகளாலும், மிஷனறிமாரின் முயற்சிகளாலும், கிறிஸ்தவம் - சைவம் என இரு சமயங்களையும் பல்வேறு காரணங்களுக்காக மக்கள் பின்பற்ற முனைந்தமையினாலும் சாதியாசாரங்களும், சாதித் தூய்மையும் குன்றுவதாக நாவலர் எண்ணி, ஆலயத்தை மையமாகக் கொண்ட கிரியா மார்க்கத்தினை விதந்து கூறும் ஆகம சைவத்தினை உருவாக்கியதுடன், அவ்வாகம சைவத்தின் ஆண் - பெண் சமூக உறவு தொடர்பான கருத்துக்களை வடமொழி தர்ம சாஸ்திர நூல்களிலிருந்து சேர்த்துக்கொண்டார். நாவலரின் நூலியல் சார்ந்த சைவம் கிறிஸ்த மதந்தான் ஒரே ஒரு உண்மைச் சமயம் என்ற கருத்திற்குச் சவால் விடுவதுடன், நிலையான, ஒரே மாதிரியான சைவ அடையாளத்தை உயர் குடியினர்க்கு வழங்கியது. வீட்டினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதத் தாக்கத்திலிருந்து காப்பாற்றுவது ஆண்கள் கடமையாயிற்று. பெண்கள் சைவ வேளாள அடையாளத்தை உட்படுத்தப்பட்டதுடன், சாதித் தூய்மையின் சின்னங்களாகவும் கணிக்கப்படலாயினர். இதற்கு அனுசரணையாக, தந்தை இறைமைச் சமூகத்தின் நடத்தை விழுமியங்களைப் பெண்கள் அநுசரிக்குமாறு, புற உலகில் கிறிஸ்த மத பரம்பலுக்கு எதிராகச் செயற்படும் தம் ஆண் உறவினருக்கு வீட்டில் பக்கபலமாக இருக்குமாறும் எதிர்பார்க்கப்பட்டனர். மிஷனறிக் குழுக்கள் தாங்கள் எதிர்பார்த்த வெற்றியினை மதமாற்றத்தில் எய்த முடியாமைக்கு நாவலர் ஒரு முக்கிய காரணம் என்பதை மறுதலித்தல் கடினம்.[9] சமஸ்கிருதமயமாக்கல் என்ற கோட்பாட்டுடன் தொடர்புடைய நாவலரின் பெண் தொடர்பான கருத்துக்கள், தமிழ்க் கிறிஸ்தவப் பெண்ணுக்கு எதிரானதொரு சைவத் தமிழ் பிம்பம் படைக்கப் பெரிதும் துணை போயின என்பதை மறுதலித்தலும் கடினம்.

''As Bishop Sabhapathy Kuledran observed, when comparing the promise Christian conversions showed in Jaffna at the beginning of the century to their disappointing results, this low rate of conversion was largely due to Navalar.''

''The Hindu Renaissance Among the Tamils'', Religious Controversy in British India : Dialogue in South Asian Languages edited by Kenneth W Jones (New York:SUNY, 1992), 48-49.

### அடிக்குறிப்புகள்

1. Gender எனும் ஆங்கிலச் சொல்லினை தமிழில் பால் என்று மொழிபெயர்ப்பது வழக்கம். எடுத்துக்காட்டாகத் திணை, பால், எண், இடம் எனும் இலக்கண வழக்காறில் பால் என்பது gender என்று குறிப்பிடப்படுகிறது. sex எனும் பதமும் தமிழில் பால் என்றே வழங்கப்படுகிறது Sexual என்பது தமிழில் பாலியல் என்று மொழி பெயர்க்கப்படுகின்றது. எனினும், ஆங்கிலத்தில் sex, gender என்பன ஒரு பொருட் சொற்கள் அல்ல. Sex என்பது கருக்கட்டலின்போது நிகழும் ஆண் பெண் உயிரியல் (physiological) தொழிற்பாடுகளையும் குறிக்கும். ஆனால் gender என்ற பதம் ஒரு சமூக பண்பாட்டுக் கருத்தரங்கும். பிறப்பாலுண்டாகும் ஆண்-பெண் உயிரியல் வேறுபாடுகளைச் சுட்டாது. இக் கட்டுரையில் gender எனும் சொல் ஆண்- பெண் உயிரியல் வேறுபாடுகளைச் உறவும் என்ற சிக்கலான கருத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

2 " Partha Chatterjee, "The Nationalist Resolution of the Women's Question" in Recasting Women: Essays in Colonial History edited by Ktikiim Sangari and Sudesh Vaid (New Brunswick. N.J. : Rutgers University Press. 1990)233.

3 Charles R. A. Hoole.Modern Sannyasins: Protestant Missinary Contribution to Ceylon Tamil (Bern:Peter Lang, 1995). 251.

4 Selvy Thiruchandran, The Spectrum of Femininity: A Process of Deconstruct ion (New Delhi: Vikas Publishing House Ltd., 1998), 97-100.

5 Ibid., 130.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 James E. Tennct, Christianity in Ceylon (London. 1850), 157.

7 Thiruchandran. 1998, 98.

8 Karen Prentiss, The Embodiment of Bhakti of (New York: Oxford University Press, 1999). 134-52).

9 The impact of Arumuga Navalar made on missionary efforts to spread Protestant Christianity among the Tamils is difficult to assess. How does one count people who might have converted if he had not existed? Judging from the literature of the dispute that continued throughout the century, however. Navalar's own intellectual critiques and his organized preaching circuits were powerful weapons that Shaivas used effectively to win the loyalty of the Shaiva literati in Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன நோக்கில் மரபுத்தமிழ் இலக்கணம்: கலாநிதி பண்டிதர் சச்சியின் மஞ்சுகாசினியம்

பேராசிரியர் **அ.சண்முகதாஸ்,** **Ph.D.(Edin.)**
தகைசார் பேராசிரியர்(யாழ். பல்கலைக் கழகம்)

## 01.மஞ்சுகாசினியம்: இயங்கு தமிழியல்

பண்டிதர் க.சச்சிதானந்தன் மஞ்சு காசினியம் என்னும் பெயரில் இரண்டு நூல்களைத் தந்துள்ளார். முதலாவது நூல் "மஞ்சுகாசினியம் : இயங்கு தமிழியல்" என்பதாகும்.

**"இந்தப் புதிய சூழ்நிலையில், இன்று வழங்கும் தமிழ்மொழிப் பிரயோகத்துக்கு புதியதோர் இலக்கணம் அமைக்கவேண்டியது மிகமிக அவசியம். அந்த இலக்கணம், தமிழ் மொழியின் அடிப்படை அமைப்பில் உருவாக வேண்டும். புதிய தமிழ் வடிவங்களையும், பிரயோகங்களையும் உள்ளடக்கி, அடிப்படை மாறாமல் எழுதப்பட வேண்டும். தமிழில் வினையுருவங்கள் எவ்வளவோ வளர்ந்துள்ளன. வேற்றுமைப் பொருள், இடைச்சொற் பிரயோகங்கள், புதிய கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. எனவே, புதிய பிரயோகங்களுக்கு தமிழ் அடிப்படை மாறாமல் ஒரு நூல் எழுதப்பட வேண்டும். அந்தத் தேவையை நிறைவேற்றவே இந்நூல் எழுந்தது."**

இவ்வாறு இந்நூல் எழுந்த தேவை கூறப்பட்டுள்ளது. இன்று தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுத முற்படுபவர்கள் நவீன மொழியியற் கோட்பாடுகளைத் தள்ளிவிட்டு எழுதமுடியாது. மாற்றமைப்புப் பிறப்பாக்க இலக்கணக் கோட்பாட்டினை முன்வைத்த நோம் சொம்ஸ்கி வாக்கியங்களின் கட்டமைப்புப் பகுதிகளை முழுமையான வாக்கியத்திலிருந்தே பகுப்பாய்வூடாக இனங் கண்டுகொள்ளலாம் என்பதை விளக்கிக் காட்டினார். பண்டிதர் சச்சி உளவியல் முழுமைக் கொள்கை (Ges talt Theory) யைப் பின்பற்றி "வாக்கியமென்னும் முழுமையிலிருந்து ஆரம்பமாகிப் பகுதிகளுக்குச் செல்கின்றது. பகுதிகள் முழுமையின் அமைப்பிலேயே கருத்துப்பெறுவன......... அதனால் பகுப்பியல், வாக்கியவியலின் பின்னேயும் ஒலியியல் அதற்கு பின்னேயும் அமைவதைக் காணலா ம்." என்று கூறுகிறார். மொழிக் கூறுகளை இனங்கண்டு பகுப்பாய்வு செய்வதற்கு மொழியியலாளர் வாக்கியத்திலிருந்தே தொடங்குகின்றனர்." The man hit the ball" என்னும் வாக்கியத்தை சொம்ஸ்கி 50 ஆண்டுகளுக்கு முன்னரேயே பின்வருமாறு பகுப்பாய்வு செய்து காட்டியுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பண்டிதர் சச்சி கூறுகின்ற விடயம் புதமையானதல்ல. தமிழ்மொழியில் இத்தகைய பகுப்பாய்வினைச் செய்து பேராசிரியர்களான ச.அகஸ்தியலிங்கம், வ.அய். சுப்பிரமணியம், திருகந்தையா, ச.தனஞ்செயராசசிங்கம், அ.சண்முகதாஸ் ஆகியோர் கலாநிதிப் பட்ட ஆய்வேடுகளைச் சமர்ப்பித்தனர். இவர்கள் யாவரும் நோம் சொம்ஸ்கியினுடைய பிறப்பாக்க மாற்றமைப்பு இலக்கண மாதிரியினைப் பின்பற்றியே தங்களுடைய ஆய்வுகளைச் செய்தனர். இத்தகைய ஆய்வினைப் பண்டிதர் சச்சி இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழர்க்கு மஞ்சுகாசினியமூடாக மீண்டும் நினைவுபடுத்த எண்ணியுள்ளார். அதனுடன் இக்காலத்துக்கேற்ற எடுத்துக்காட்டுகளை வழங்குதல் அவருடைய நோக்காகவுமுள்ளது. எழுத்துக்களாகிய சொற்கள், சொற்களாலாகிய தொடர்கள் என்னும் மரபுவழிப் பகுப்பு நிலையிலிருந்து வேறுபட்டு, தொடர்கள், அவற்றை ஆக்கிய சொற்கள், சொற்களை ஆக்கிய ஒலியன்கள்/எழுத்துக்கள் என்று பகுப்பாய்வு செய்யும் முறை புதுமையானதென்பதில் ஐயமில்லை. இதனடிப்படையில் பண்டிதர் சச்சியினுடைய நூலின் இயல் அமைப்புப் பின்வருமாறு அமைகின்றது. 1.வாக்கியம், 2.பகுப்பியல், 3.ஒலியியல். ஆனால் இவற்றை விரித்துக் கூறுமிடத்துத் தெளிவின்மை சில இடங்களிலே தென்படுகிறது. வாக்கியம் என்னும் முதலாவது இயலிலே வாக்கியங்களின் வகைகள் பற்றிக் கூறி, இரண்டாவது இயலில் வாக்கியங்களின் பகுப்பு, பெயர் - வினைகளின் பகுப்பு என்பவற்றை விளக்கியிருக்கலாம். ஆனால், ஆசிரியர் முதலாவது இயலிலும் வினை வகைகள், பெயர் வகைகள் கூறி, பின்னர் இரண்டாவது இயலிலும் அவற்றைக் கூறுவது கூறியது கூறலாக அமைகின்றது.

பண்டிதர் சச்சி இலக்கண விளக்கங்களுக்கு வழங்கும் எடுத்துக்காட்டுக்கள் இந்நூலின் மிகச் சிறப்பான பண்பாகும். அவர் வழங்கும் எடுத்துக்காட்டுக்களின் பண்புகள் வருமாறு:

(1) இன்றைய மாணவர்கள் எளிதாக விளங்கிக்கொள்ளத்தக்கன. குறிப்பு வினை-யையும் தெரிநிலை வினையையும் விளக்க,

வியாபாரம் தொடங்கும் ஏழை இனிச் செல்வன்.

கண்ணன் விமானத்தில் கனடா செல்வன்.

இன்னும் எடுத்துக் காட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய நடைமுறை எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

(2) பண்டைய இலக்கிய எடுத்துக்காட்டு களைத் தரும்போது அவற்றை எளிமையாக, விளங்கிக்கொள்ளத் தக்க வகையில் வழங்குகிறார். ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத் தொருமொழி, தொடர் மொழி என்பவற்றை விளக்க அவர் காட்டும் சங்க இலக்கிய உதாரணம் சிறப்பாயுள்ளது. அது பின்வருமாறு அமைகிறது:

"ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, என்பன அடிப்படைச் சொற்கள். தொடர் மொழிகள் இவற்றால் ஆக்கப் பட்டவை. சங்க இவக்கியங்களில் வழங்கும் சொற்களில் மிகப்பெரும்பான்மையானவை இந்த அடிப்படைச் சொற்களாகவே காணப் படுகின்றன.

சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கிவள்

உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு, பெரும், இவள், உயிர், தவ என்பன ஈரசை ஒரு சொல்.

கோட்டு, ஆங்கு என்பன ஓரசைச் சொற்கள். சிறிது, பெறிது, காமமோ என்பன தொடர்மொழிகள்."

(3) இக்காலப் பயன்பாட்டிலுள்ள சொற்க ளைப் பயன்படுத்துதல்:

"மலேரியாவை வருவிக்கும் கிருமி நுண்ணியது."

"இடுக்கியினால் இரும்பை இறுக்கிப் பிடித்தான்."

போன்ற எடுத்துக்காட்டுக்களில் மாணவர்களுக்கு இப்பொழுது அறிமுகமான சொற்களாகிய மலேரியா,கிருமி,இடுக்கி என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

(4) இன்று வழங்கும் வாக்கியங்களுக்கு இலக்கண விளக்கம் கொடுக்கும்போது பொருத்தமான நடைமுறையிலுள்ள வாக்கிய ங்களை எடுத்துக்காட்டாகக் காட்டுதல். மூன்றாம் வேற்றுமைக்குக் கூறப்பட்ட ஆல் உருபு நீங்கல், இடப்பொருள், ஒன்றொடமையாது இன்னொன்றையும் அவாவுதல், எண்ணுப்பொருளில் உம்மொடு சேர்த்தல் ஆகியவற்றினை உணர்த்த வழங்குகின்றது. அவற்றுக்குப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் தரப்பட்டுள்ளன.

"இவர் வானத்தால் வந்தவரோ?" (நீங்கல்)

"தெருவால் மாடுகள் ஓடின" (இடம்)

"கலியாணப் பதிவோடு நிறுத்தவில்லை." (தாலியும் கட்டினான்)

"மலரும், கனியும், கிழங்கும், பருப்போடு நான்கு"

இன்றைய வழங்கு தமிழுக்கு இலக்கணம் எழுதப் பல விடயங்களைப் புதிதாகக் கூறவேண்டும். பண்டிதர் சச்சி இந்நூ லிலே அவ்வாறு புதியன புகுத்தி உள்ளார். இது அவருடைய நூலின் இன்னொரு சிறப்புப் பண்பாகும். எடுத்துக் காட்டாக ஒன்றைத் தருகிறேன். இடைச்சொற்கள் பற்றி தொல்காப்பியம், நன்னூல், இலக்கணச் சுருக்கம் ஆகியவற்றிலிருந்தும் அவற்றின் உரைகளிலிருந்தும் பலவற்றை அறிந்துள்ளோம். அவற்றுக்கு மேலாக ஆசிரியர் சிலவற்றைச் சேர்த்துள்ளார். ஏகார இடைச்சொல், எவ்வெப் பொருள்களிலே வரும் என்பதை வகைப்படுத்தி எடுத்துக்காட்டுக்களும் தந்துள்ளார். அவை வருமாறு (பக் 123-126):

1. தேற்றம் : நேற்று வந்த வாலிபனே அவளின் கணவன்.
   கொழும்புக்குப் போயே வரவேண்டும்.

2. பிரிநிலை : எண்பது பேருள் விக்கிரமனே பரிசு பெற்றான்.
   ஒளிகளில் கதிரொளியே தலையாயது.

3. எதிர்மறை : எதிர்மறைப் பொருளைத் தரும்போது ஏ குறுகி
   உச்சரிப்புத் தொனியால் வேறுபடும். நானே பணத்தை எடுத்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்த உதவியை மறப்பமே.

4. எண் : இரவே பகலே இவன் அயராது உழைக்கிறான்.

5. குறிப்பு : தேர்தல் காலத்தில் தெருப்போடுவேன் என்றீரே.

6. வினா : நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்கு என்னோடு வருவீரே.

7. ஈற்றசை : என்று மேத்தித் தொழுவோமியாமே.
இசைநிறை: கனவு கண்டதிலே ஒருநாள் கண்ணுக்குத் தோற்றாமல்

8. அதிசயம் : கேட்டீரே! கதையை.

9. வேண்டுகோள் : இப்பொருளில் ஏகாரம் குறுகி குறையிரக்கும்
தொனியில் உச்சரிக்கப்படும்.
என்னோடு துணையாக வருவீரே. (வாரும்)

10. ஆசை : அப்பா தீபாவளிக்கு உடுப்போடு வருவாரே.

11. காட்சி : எண்பதில் இளமையாய் வாழ்கின்றீரே.

இங்கு அதிசயம், வேண்டுகோள், ஆசை, காட்சி ஆகியன இன்றைய வழங்கு தமிழ் நோக்கி ஆசிரியராலே புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கணங்கள் சூத்திர வடிவிலே அமைந்தமையாலும், அவற்றுக்கான உரைகளும் இன்று எளிதிலே விளங்கிக்கொள்ள முடியாத தமிழிலே அமைந்தமையாலும் இலக்கணம் கற்பது பலருக்கு எளிதாயிருப்பதில்லை. அவற்றையெல்லாம் எளிதிலே விளங்கிக் கொள்ளத்தக்கதாக, நல்ல ஒழுங்கமைப்புடன் நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் வழங்கும்போது, அவற்றைக் கற்பதிலே ஏற்படும் மகிழ்ச்சி எண்கணிதத்தைக் கற்பதிலே ஏற்படும் மகிழ்ச்சி போன்றிருக்கும். தெரிநிலை வினைமுற்று விகுதிகள் பற்றிக் கூறுமிடத்து ஈறுகளை நிரைப்படுத்திச் சொற்களை எடுத்துக்காட்டுக்களாகத் தருவதே வழக்கம். ஆனால், பண்டிதர் சச்சி அவ்விகுதிகளை அவற்றின் பயன்பாடு நோக்கிப் பகுப்பாய்வு செய்து, வழக்கிலே பயன்பாட்டிலுள்ள ஒவ்வொரு விகுதிக்கும் ஒவ்வொரு வாக்கியம் எடுத்துக்காட்டாகத் தருகிறார். அவை பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.1 **தன்மை ஒருமை விகுதிகள்:**

அன், அல், என், ஏன்

| | |
|---|---|
| நான் நாளை வருவேன். | அன் |
| அடைவல் யான் என்னும் உறுதி வேண்டும் | அல் |
| படக்காட்சிக்குப் போக மாலை வருவென் | என் |
| என்ன காரியம் செய்தேன். | ஏன் |

1.2 **தன்மைப் பன்மை விகுதிகள்:**

அம், ஆம், எம், ஏம், ஓம், ஓம்

| | |
|---|---|
| காட்சியை இனிதே காட்டி முடித்தனம். | அம் |
| இறைவனைப் பணிவாம். | ஆம் |
| நன்றாய் வாழ்ந்தனெம் என்ற மகிழ்ச்சி நமக்குண்டு | எம் |
| கீரிமலைக்குப் போனோம் | ஓம் |

இங்கு எம், ஒம் விகுதிகளுக்கு எடுத்துக்காட்டுகள் தரவில்லை. இவை வழக்கிலில்லை.

2.1 **முன்னிலை ஒருமை விகுதிகள்:**

இ, ஐ, ஆய்

| | |
|---|---|
| பணத்தை நாளையே எடுத்தி. | இ |
| என்ன காரியம் செய்தனை | ஐ |
| உன் வல்லமையை இங்கே காட்டினாய் | ஆய் |

2.2 **முன்னிலைப்பன்மை விகுதிகள்**

இர், ஈர், மின்

| | |
|---|---|
| நாட்டின் நன்மைக்காக உழைப்பிர் | இர் |
| உண்ணீர் உண்ணீர் என்று விருந்தினர் கூறினார். | ஈர் |
| கண்காள் காண்மின் | மின் |

3.1 **படர்க்கை ஒருமை ஆண்பால்**

அன், ஆன்

| | |
|---|---|
| கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால். | அன் |
| எதிரே வண்டி வருவதைப் பாலன் கண்டான் | ஆன் |

3.2 **படர்க்கை ஒருமை பெண்பால்**

அள், ஆள்

| | |
|---|---|
| கமலா நல்ல காரியங்களைச் செய்வள் | அள் |
| கன்னி அரங்கில் ஆடினாள். | ஆள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3 **படர்க்கைப் பன்மை பலர்பால்**

அர், ஆர், ப, மார்

காலத்தை நன்றே கழித்தனர் — அர்

நடிகர் மேடையில் தோற்றினார் — ஆர்

ஒன்றே கடவுள் என்று பெரியோர் கூறுப — ப

மலையில் வேடர் தேன் கொண்மார். — மார்

3.4 **அஃறிணைப் படர்க்கை ஒருமை**

து, று

கோழி கூவிற்று — று

கட்டிடம் விழுந்தது — து

1.5 **அஃறிணைப் படர்க்கை பன்மை**

அ

குயில்கள் கூவின. — அ

இந்நூலின் மிக முக்கியமான பண்பு என்னவென்றால், தமிழ் இலக்கண மரபுவழி நின்று, இன்றைய இயங்கு தமிழுக்கேற்றபடி புதுமைபுகுத்தி இலக்கணத்தை அமைத்துச் செல்வதாகும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைவது, இவ்விலக்கண நூலின் ஒலியியல் என்னும் பகுதியாகும். நவீன மொழியியலின் பகுதியாகிய ஒலி யனியல், ஒலியியல் பற்றி அறிந்த ஆசி ரியர், தொல்காப்பியர் பிறப்பியலிலும், எழுத்ததிகாரத்திலும் கூறியனவற்றையே எளிமையாகவும், ஏற்ற எடுத்துக்காட்டுகள் காட்டியும் விளக்கியுள்ளார்.


2. மஞ்சுகாசினியம் தமிழ் யாப்பியலின் அடிப்படை


தொல்காப்பியருடைய செய்யுளி யலும், யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் தமிழ் யாப்பியலுக்கு இலக்கணம் கூறியுள்ளன. இவ்வாறு கூறப்பட்ட யாப்பியலை அதன் பயன்பாட்டுநிலை நோக்கியும் விளக்கநிலை நோக்கியும் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவை பின்வருமாறு:


1. Chidambaranatha Chrttiyar, A.
**Advanced Studies in Tamil Prosody**
Annamalai University
Annamalainagar. 1943

2. சண்முகதாஸ். அ.
**தமிழின் பா வடிவங்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968இல் கலாநிதிப் பட்டத்துக்காக எழுதப்பட்ட ஆய்வேடு. ஆனால் சமர்ப்பிக்கப் படவில்லை. 1978 இல் தட்டச்சு வடிவில் அறிஞரிடையே பரிமாறப்பட்டது. 1998இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை நூலாக அச்சிட்டு வெளியிட்டது.

3. கந்தசாமி.சோ.ந.
**தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்**
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர். 1989

ஆய்வு முன்னோடிகள் பற்றிய தன்னுடைய முதலாவது இயலில் பண்டிதர் சச்சி மேற்காட்டிய நூல்களுள் எதனையேனும் குறிப்பிடவுமில்லை. மீளாய்வுக்கு எடுத்துக்கொள்ளவுமில்லை. ஆக Subramanyam என்பவருடைய நூலை மட்டுமே இலக்கிய மீளாய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அவருடைய நூல் வருமாறு:

Subramanyam. S.
**The Commonness in the Metre of Dravidian Languages,**
Trivandrum, 1977.

சுப்பிரமணியம் அசை பற்றிக் கூறிய சில கருத்துக்களை மஞ்சுகாசினியம் ஆசிரியர் மறுத்துக் கூறுகிறார். தமிழ் யாப்பின் அசையும் ஆங்கிலச் சொல்லவையும் ஒன்றெனசுப்பிரமணியம் கருதியது தவறானது என்பதை பண்டிதர் சச்சி சுட்டிக்காட்டியுள்ளார். திராவிட மொழிகளுக்குப் பொதுவான யாப்பியலை நோக்காது சுப்பிரமணியம் சமஸ்கிருத யாப்பியற் கோட்பாட்டின் செல்வாக்குக்குட்பட்ட தமிழ் யாப்பினை நோக்கியதாலே தவறான முடிவுகளுக்கு வந்துள்ளார் என பண்டிதர் சச்சி விளக்கியுள்ளார்.

செம்மொழிச் சமஸ்கிருத யாப்பியலைப் பின்பற்றுவது பிற்காலத் தமிழ் யாப்பியல் ஆசிரியர்களின் வழக்கமாகிவிட்டது. இதனால் தமிழ் யாப்பியல் நூல்களில் திராவிடப் பண்புகள் கைவிடப்பட்டன என்றும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் திராவிட மரபினை நன்கு பேணி தமிழ் யாப்பிலை நிலைநிறுத்தினர் எனவும் பண்டிதர் சச்சி குறிப்பிடுகிறார்.

இந்த நூலைப் படித்த போது, இதனை ஆசிரியர் எதற்காக எழுதினார் என்னும் வினா உள்ளத்தில் எழுந்தது. தொல்காப்பியர் கூறிய இலக்கண விதிகளை அறிவியல் நுணுக்கு நோக்குக்குட்படுத்துவது என்று ஆசிரியர் இந்நூலிலே கூறியுள்ளார். அப்படியாயின், அவ்வாறு அறிவியல் நுணுக்கு நோக்குக்குட்படுத்தப்பட்ட ஆய்வினை நம்மவர்கள் நன்கு விளங்கி அறியும் வண்ணம் தமிழிலே ஏன் எழுதவில்லை என்பது விடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல முடியாத வினா வாக உள்ளது. ஆங்கிலத்திலே வாசிக்கக் கூடியவர்கள் கூட எந்தளவுக்கு யாப்பியலைத் தெரிந்தவராயுள்ளனர்?

யாப்பியல் கூறுகளுக்கு அவர் கொடுக்கும் விளக்கம் பொருத்தமானது ஆகவும் தெளிவானது ஆகவும் அமைகின்றது. அவர் சீர் என்னும் யாப்பியல் கூறுக்கு பின்வருமாறு விளக்கம் சொல்கிறார்.

'Thus a cir is a mesningful word unit and cannot be split. No part is Taken to the previous or the succeeding cir in order to fill up phonological deficiencies, prosodical or otherwise."

ஆசிரியரிடமிருந்த எண்கணித அறிவு, தர்க்க, உளவியலறிவு ஆகியன இந்நூலாக்கத்துக்குப் பயன்பட்டுள்ளன. கெஸ்றால்ற் (Gestalt) உளவியல் கோட்பாடு யாப்பியல் விளக்குத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## 3. நிறைவுரை

பண்டிதர் சச்சியின் பன்முக ஆய்வின் ஒரு பகுதியாக மஞ்சுகாசினியம் அமைகின்றது. சிறந்த கவிஞராக, புனைகதை ஆசிரியராக, வானசாஸ்திர விற்பன்னராக, தமிழ் -ஆங்கில -சமஸ்கிருத இலக்கியத் திறனாய்வாளராக, இலக்கண ஆய்வாளராக பண்டிதர் சச்சி விளங்குகிறார். நவீன மொழியியலறிவுடையவர் என்ற வகையில் தமிழ் இலக்கணத்தை அப்பின்னணியிலே பார்த்து விளக்கம் தருகிறார். ஆனால், தொல்காப்பிய இலக்கண மரபிலிருந்து விலகுபவராக அவர் காணப்படவில்லை.

### அடிக்குறிப்புகள்

1. சச்சிதானந்தன், மதுரைப் பண்டிதர் க.மஞ்சுகாசினியம் : இயங்குதமிழியல், நவயோக அச்சகம், யாழ்ப்பாணம், 2001, பக் iv.

2. Chomsky, Noam, **Syntactic Structures**, Mouton, The Hague, 1957, p27

3. சச்சிதானந்தன், மதுரைப் பண்டிதர் **க.மஞ்சுகாசினியம் : தமிழ் யாப்பியலின் அடிப்படை,** நவயோக அச்சகம், யாழ்ப்பாணம், 2002, பக் 155.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதில் ஈழத்துக் கவிதை அரசியல், போர் : கவிதை

கலாநிதி **ஸ்ரீ பிரசாந்தன்**,
முதுநிலை விரிவுரையாலளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

ஈழத்துப் படைப்பிலக்கியம் தனக்கென ஒரு முகங்காட்டிச் சிறக்கத் தொடங்கியது இருபதாம் நூற்றாண்டிலேயே எனல் வேண்டும். முன்பு, எந்தவிதமான மனப் பிறழ்வுகளும் இல்லாமல் தமிழக இலக்கியங்களையே ஈழத்தவரும் தம் இலக்கியங்களாகக் கொண்டாடி வந்ததுண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்காங்கே இடம்பெற்ற தமிழ்நாட்டு – ஈழநாட்டுப் புலவர்தம் வாதங்களும், வேற்றுமையைத் தெளிவாகவே கோடு கிழித்து உணர்த்திவிட்ட இருபதாம் நூற்றாண்டின் அரசியற் சூழ்நிலையும் ஈழத்திலக்கியம் தனித்துவத்தோடு செழிக்க அடிப்படையாய் அமைந்தன.

சில விதிவிலக்கான உதாரணர்களைத் தவிர்த்துவிட்டு நோக்கின், தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழறிஞர் என்னும் பதம், பெரும்பான்யைும் தமிழ்நாட்டு அறிஞர்களையே குறித்து வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான் – ஆறுமுகநாவலர்க்குச் சற்று முன்னும், பின்னுமாக – தமிழகத்திலும் சிறப்பாகப் போற்றப்பெற்ற அறிஞர் பலர் ஈழத்தில் தோன்றினர். அத்தகைய ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்கூட, பழந்தமிழ் இலக்கிய நூல்களில் ஆட்சி உடையவர்களாகவும், அவற்றுக்கு உரைசெய்பவர்களாகவும், அவற்றைச் செம்மையுறப் பதிப்பித்து அளிப்பவர்களாகவும், அவற்றினை அடுத்த மாணவ சந்ததியிடம் கையளிப்பவர்களாகவும், பிரசங்க மரபு மூலம் அவற்றை அறிமுகம் செய்பவர்களாகவும் விளங்கினார்களேயன்றி, தாமே புத்திலக்கியங்களைப் படைப்பதில் பெருஞ் சிரத்தை காட்டவில்லை. அன்பை வாழ்வின் பண்பாகவும் அறத்தை வாழ்க்கைப் பயனாகவும் கொண்டு, வாழ்வுக்காகவே தமிழ் படித்த அவர்கள் ஒரு சில படைப்பாக்க முயற்சிகளைச் செய்துள்ளனரெனினும், அவை பெரும்பாலும் அறப்போதனை, சமயப்போதனை என்ற எல்லைகளுக்குள்ளேயே அமைந்துவிட்டன.

(எ–டு) **நடந்தாளொரு கன்னி மாராச**
**கேசரிநாட்டிற் கொங்கைக்**
**குடந் தானசைய வொயிலா**
**யது கண்டு கொற்றவருந்**
**தொடர்ந்தார் சந்யாசிகள் யோகம் விட்**
**டார் சுத்த சைவரெல்லாம்**
**மடந் தானடைந்து சிவபூ**
**சையுங் கட்டி வைத்தனரே** [1]

**– சுப்பையனார்**

என்பது போன்ற கனகி புராணப் பாடல்கள் மிகமிகச் சிறுபான்மையளவில் விதிவலக்காகவே தோற்றம் பெற்றன. அங்கத விமரிசனப் பாடல்களாத் தோற்றம் பெற்ற இப் பாடல்களை முன்னுதாரணமாகக் கொண்டு இலக்கிய மரபொன்று வளரவில்லை என்பது கவனிப்பக்குரியது.

படைப்பாக்கச் சித்திரிப்புத் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சொல்லப்படுகின்ற பொருளால் விளையும் பயனையே பிரதானமாகக் கருதிய அக்காலத்து ஈழத்துப் புலவர்களின் ஆக்கங்கள் அப்போதையை சமுதாயத்தேவைக்கும், இலக்கியச் செல்நெறிக்கும் இயையவே இருந்தன என்பதை நாம் புரிந்துகொள்ளல் இயலும். இத்தகையதொரு நிலைமையால், **ஈழத்து இலக்கியம்** தனியாக முனைப்புப் பெறத்தொடங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கூடப் படைப்பாக்க முயற்சிகள் பெரிதும் வெற்றிபெறவில்லை என்பதே உண்மையாகும்.

இவ்வரலாற்றுத்தொடர் நோக்கில், இருபதாம் நூற்றாண்டானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் உடையதாகிறது. அந்நூற்றாண்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பகுதியளவில் ஏற்பட்ட நவீனத்துவம் பற்றிய பிரக்ஞையின் பின்னர், குறிப்பாக ஈழத்துப் படைப்பாக்க முயற்சி மேலும் புதிய உத்வேகம் பெற்றது.

### கவிதை உள்ளடக்கமும் நிர்ணயித்த காரணிகளும் அரசியலும் போரும்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக்கூறுகளில் ஈழத்துக்கவிதை பெரும்பான்மையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய கவிதைப் பண்புகளோடேயே தொடர்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தங்கள் வரையும் கவிதைச்சூழல் மாறுபடுவதற்கான அரசியல், சமூகக் காரணங்களேதும் ஈழத்துவரலாற்றில் ஏற்படவில்லை. நவீனகவிதையின் தந்தையெனப் போற்றப்படுகின்ற பாரதியின் தோற்றத்திற்குச் சிலகாலத்திற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் சிறுபான்மை நவீனத்துவ அடையாளங்களோடு எவ்வாறு சில கவிஞர்கள் தோற்றம் பெற்றனரோ அவ்வாறே ஈழத்திலும் நாற்பதுகளில் பிரக்ஞாபூர்வமாக ஏற்பட்ட நவீனத்துவ மாற்றங்களுக்குக் கட்டியம் கூறுவதுபோல, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் பல துறைகளிலும் நவீனத்துவம் அரும்பத் தொடங்கியிருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியினால் ஆசியாவின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட நவீனத்துவ மாற்றத்தை ஒத்து, ஈழத்திலும் நாவல் முதலிய புதிய இலக்கிய வடிவங்கள் அறிமுகமாயின.உரைநடை சிறப்புறவளர்ச்சியடைந்தது. நிலப்பிரபுத்துவநிலையிலிருந்து விடுபட்டமையினால் ஏற்பட்ட பின்விளைவுகளும், ஆங்கிலக் கல்வியின் வழிவந்த பிறமொழி இலக்கியப்பரிச்சயமும், தகவல் தொடர்பாடல் துறையின் வளர்ச்சியும் இவ்வாறு ஈழத்தமிழ் இலக்கியப் போக்கை ஓரளவிற்கேனும் மாற்றுதற்குத் துணைசெய்தன. எனினும், மரபு நிலைப்பட்டுத் தொடர்ந்த கவிதை உட னடியாகப் பெரு மாற்றத்தைச் சந்தித்ததெனச் சொல்லமுடியாவிட்டாலும், ஒருசில கவிஞர்கள் நவீனத்துவ அம்சங்களை முன்னரே பாடத்தொடங்கியவர்களாக விளங்கினார்கள்.

மரபுக்கல்வி முறையில் வந்த சிலரும் அந்நிய ஆதிக்கத்தினால் சமுதாயத்திலே தோன்றிய மாற்றத்தினை பதினெட்டாம் நூற்றாண்டின் நிறைவு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலப்பகுதியில் பாடத் தலைப்பட்டனர்.

மிக அருந்தலாகத் தோற்றம் பெற்ற இத்தகைய சமகாலச் சித்திரிப்பு மற்றும் முற்போக்கான கருத்துக் கவிதைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு நிறைவை ஒட்டிய காலப் பகுதியிலும் சிலரால் எழுதப்பட்டன. தெல்லிப்பளை பாவலர் துரையப்பாபிள்ளை, அச்சுவேலி தம்பிமுத்துப்புலவர், திருகோணமலை தி.த. சரவணமுத்துப்பிள்ளை முதலியோர் அவர்களுள் முக்கியமானவர்கள்.

எனினும், இருபதின் தொடக்கத் தசாப்தங் களிலும் சமயஞ் சார்ந்த பிரபந்த மரபிலக்கியங்களே பெருமளவிலே தோன்றின. இதற்குக் காரணம் ஈழத்தில் காலனித்துவத்திற்கெதிரான போராட்டம், மதத்தை முன்னிறுத்திய போராட்டமாக இடம்பெற்றதேயாகும். அதாவது மதமாற்றத்திற்கு எதிரான சமுதாய முன்னெடுப்பாக இப் போராட்டம் ஆறுமுகநாவலர் தலைமையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அக்காலகட்டத்தில் தோன்றிய கவிதைகள் பெரும்பாலும் மதநிலைப்பட்டனவாகவே காணப்பட்டன. ஆலயங்கள் பற்றிப்பாடுவதும் சமய விரத அனுஷ்டானங்கள் பற்றிப் பாடுவதும் வடமொழி இலக்கியங்களை மொழிபெயர்த்துப்பாடுவதும் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துக்கவிதை இலக்கியங்களின் போக்காயிற்று. இப்போக்கே பெரிதும் மாறுபாட்டுக்குள்ளாகாமல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக்கூறுகளுக்கும் தொடர்ந்து வந்தது. இத்தகைய படைப்புகளைத் தந்தோரில் குமாரசுவாமிப் புலவர், மயில்வாகனப் புலவர், அப்துல் காதிறுப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தொடர்ந்த காலத்தில், பாரதியின் பாதிப்பு, ஈழத்து இதழ்கள் பலவற்றினது வரவு, இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளது தோற்றம் போன்ற காரணங்களால் ஈழத்து படைப்பிலக்கியத்துறை வளர்வதற்கேற்ற சூழ்நிலை பெரிதும் வாய்த்தது. குறிப்பாக, 30களில் வரத்தொடங்கிய ஈழகேசரி பத்திரிகையில் (1939 – 1958) வெளிவந்த கவிதைகள் சிலவற்றிலும் சமூக அக்கறையோடுங் கூடிய இத்தகைய நவீனத்துவக் கருத்துகள் பேசப்பட்டிருப்பதனைக் காணலாம். இப்பத்திரிகையில் எழுதிவந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. நடராசன், அல்வையூர் மு. செல்லையா முதலியோரதும், உயர் கல்வித் துறையோடு தொடர்புபட்டிருந்த விபுலானந்தர், க.கணபதிப்பிள்ளை ஆகியோரதும் மற்றும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை,அப்துல் காதர் லெப்பை ஆகியோ ரதும் கவிதைகள் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கன. எனினும் இவர்கள் அனைவரையும் பூரணமாக நவீன கவிஞர்கள் எனச் சொல்ல முடியவில்லை. மரபினதும் நவீனத்துவத்தினதும் வெவ்வேறு விகிதாசார அளவுகளிலான கலவைகளாக இவர்கள்தம் படைப்புகள் விளங்கின.

ஒரு நாட்டின் சுதந்திரத்தை நோக்கிய காலகட்டமானது அரசியல், சமூகத் துறைகளிலும் அவற்றின் தொடர்பாக இலக்கியத்துறையிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழக்கூடியது. எனினும் ஈழத்தில் அத்தகையதொரு நிலை காணப்படவில்லை என்பது கவனிப்புக்குரியதாகிறது. குறிப்பாக இந்தியாவில் இடம்பெற்றது போன்ற சுதந்திரத்திற்கான போராட்டம் ஈழத்தில் நடைபெறவில்லை. இதனால் சுதந்திரப்போராட்ட காலத்தில் தமிழ்நாட்டில் மாபெரும் நவீன கவிஞராக பாரதியார் தோற்றம் பெற்றதைப்போன்று, சமவேளையில் ஈழத்தில் எவரும் உருவாகவில்லை. சுதந்திரம் பற்றியும் ஈழமாதாவின் விடுதலை பற்றியும் பாடிய அக்காலத்து ஈழத்துக்கவிஞர்கள் கூட பெரிதும் பாரதியாருடைய தேசியகீதங்கள், விடுதலைக்கீதங்கள் ஆகியவற்றை அடியொற்றியே பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

40களில் தோன்றிய கவிதைகள் காலனித்துவத்திலிருந்து இலங்கை விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பைக் கொண்டிருந்தன. சமகாலத்தில் இந்தியாவும் தனது விடுதலைக்காகப் போராடி வந்ததனாலும், இந்திய விடுதலைப் போராட்டகாலக்கவி பாரதியாரின் பாதிப்பிலேயே பெரும்பான்மைய ஈழத்துக்கவிஞர்கள் இயங்கியமையினாலும், இந்தியாவிலிருந்து அந்நிய ஆட்சியாளர்களால் அழைத்துவரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்தம் மனோநிலையாலும் இந்தியதேசம் பற்றிய அக்கறையையும் அக்கால ஈழத்தமிழ்க் கவிதைகள் கொண்டுவிளங்கின. இதனால் இலங்கைத்தேசியம், இந்தியத்தேசிய விருப்பு ஆகிய உள்ளடக்கங்களை ஈழத்துக்கவிதைகள் கொண்டிருந்தன.

1948 இல் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. இக் காலப்பகுதியில் ஏற்பட்ட மகிழ்ச்சியான மனோநிலையில், இலங்கைத் தேசியத்தைப் பாடுகின்ற கவிதைகள் பரவலாகத் தோற்றம் பெற்றன. சமவேளையில் இடம்பெற்ற தேசியகீத ஆக்கத்தேர்வு, மரதன்ஓட்டக் கவிதைப்போட்டி முதலியவற்றால் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த ஈழத்துக் கவிஞர்கள் பலரும், இலங்கை மாதாவை வாழ்த்தியும், இன ஒற்றுமையை வலியுறுத்தியும் கவிதைகளைப் படைத்தனர். ஈழத்து மண்வாசனையுடன் கூடிய இப்படைப்புகள், பாரதி பாதிப்பிலிருந்து விடுபடத் தொடங்குகின்ற தன்மையைக் கொண்டிருந்தன. இத்தகைய படைப்புகளை அளித்தவர்களுள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் முக்கியமானவர்.

(எ-டு) எஃகிய பஞ்சினைப் போலத் – தமிழ்
எல்லாள மன்னனிருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம்
வெண்டிரை மேய வெழுந்திடு மன்றே

கல்லாதவர் மனம்போல – அன்றிக்
கடுகணைக் குகைவரு கனையிருள் போல
அல்லாதழுக்காறு கொண்டோர் – மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமெனவே இருண்டங்கு சூல் கொண்டே .... 2

– சோமசுந்தரப் புலவர் –

40களின் பிற்பகுதியில் ஈழத்தின் கவிதைப்போக்கு பிரக்ஞாபூர்வமாக நவீனத்துவச் சிந்தனைகளைப் பெற்று மாறுதலுக்குள்ளாகியது. 40 களின் ஆரம்பத்தில் இலக்கிய ஆர்வமுடைய சிலர் சேர்ந்து மறுமலர்ச்சிச் சங்கத்தினை ஆரம்பித்தார்கள். ஏலவே ஈழகேசரி மூலம் அரும்பத்தொடங்கியிருந்த நவீனத்துவம், பாரதி, பாரதிதாசன் படைப்புகளால் ஊக்கம் பெற்றிருந்த மறுமலர்ச்சிச் சங்கக் கவிஞர்களால் ஆரோக்கியமாக முன்கொண்டு செல்லப்பட்டது. இச்சங்கம் மறுமலர்ச்சி இதழை வெளியிடலாயிற்று. இவ்விதழ் மூலம் நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், அ.ந. கந்தசாமி, சோ. தியாகராஜா, மஹாகவி, சாரதா, செ. கதிரேசர்பிள்ளை, யாழ்ப்பாணன் முதலிய கவிஞர்கள் கவிதைத்துறையில் பதிவாகினர்.

(எ–டு) பழந்தமிழர் அது செய்தார் இதுவுஞ் செய்தார்
பண்ணாத(து) அவர் கணக்கில் இல்லையென்று
குழந்தை மொழி வழக்கிலோர் கொள்கை இல்லை
குவலயமெல்லாம் புரட்சிக் கூச்சல் கேட்டும்
விலங்குகளாய் உணர்விழந்து அறிவும் மங்கி
வேதாந்தம் பேசுகிறோம் விழல் வேதாந்தம்
இளந்தமிழா! எழுந்துலகம் எல்லாம் சுற்றி
எங்கள் நிலை கண்டு நவ எழுச்சி காண்பாய் 3

– சாரதா –

சமவேளையில் ஈழத்து அரசியலில் இனத்துவ முரண்பாடுகள் ஆரம்பமாகின. இலங்கையின் அரசகருமமொழியாகச் சிங்களம் மாத்திரமே இருக்கவேண்டும் என்கின்ற தனிச்சிங்களச் சட்ட அறிவிப்பு, 1956இல் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. மறுமலர்ச்சிச் சங்கத்தையொட்டி வளர்ந்த கவிஞர்கள் படைப்பாக்கச்செழுமை பெற்றுக்கொண்டிருந்த அச்சந்தர்ப்பத்தில், தமிழர்களை வீறுகொள்ள வைக்கக்கூடிய விதத்தில் ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் ஈழத்தின் கவிதைப்போக்கைப் புதிய திசையில் பயணிக்க வைத்தன. முதன்முதலில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அரசியல்சார் நவீன கவிதைகள் தோற்றம் பெற்றன. இவை முனைப்புப் பெறுகின்ற காலகட்டத்திலேயே கவிதைத்துறையுள் நீலாவணன், முருகையன் போன்ற கவிஞர்கள் பிரவேசித்தனர்.

50களின் இறுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் தமிழ்மக்களிற் பலர் கொல்லப்பட்டமையும், அகிம்சை வழியில் எதிர்ப்புத் தெரிவித்த தமிழரசுக்கட்சித் தலைவர்கள் காடையர்களாலே தாக்கப்பட்டமையும், பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரையையடுத்து தென் மாகாணத் தமிழர்கள் தாக்கப்பட்டமையும் காரணமாக, தமிழ்மக்கள் தம்மையும் மொழியையும் காத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டார்கள். இதன் பின்னணியில், தமிழின – தமிழ்மொழி உணர்ச்சிக்கவிதைகள் பல தோன்றலாயின.

இக் கவிதைகள், சாத்விகப் போராட்டத்திற்கான அழைப்பை உள்ளடக்கமாகக்கொண்டு விளங்கின. இதனால், இந்தியத் தேசியத் தந்தையாக விளங்கிய மகாத்மா காந்தியின் மீதான ஈடுபாட்டையும், காந்தியக் கருத்துகளையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளும் குறிப்பிடத்தக்களவு தோன்றின.

அரசினதும் பெரும்பான்மையின மக்களினதும் துவேஷ நடவடிக்கைகளைக் கண்டித்து வந்த (1949 இல் தொடங்கப்பெற்ற) தமிழரசுக்கட்சி, இக்காலகட்டத்தில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டது. 1947 இல் இருந்து வெளிவரத்தொடங்கிய சுதந்திரன் பத்திரிகை பின்னர் தமிழரசுக்கட்சியின் சார்புநிலைப்பட்டு தமிழுணர்ச்சி ஆக்கங்களைப் பெருவாரியாகப் பிரசுரித்தது. கட்சியின் பலம் பத்திரிகைத்தளம் என்பன காரணமாகத் தமிழுணர்ச்சிக்கவிதைகள் படைத்துவந்த கவிஞர்களுக்குப் படைப்பாக்கத்திற்கு ஏற்ற சூழல் மேலும் வாய்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் திராவிடப் போராட்டகாலத் தமிழ்க்கவிதைகளின் பண்புகளை ஓரளவு ஒத்த தமிழுணர்ச்சிக் கவிதைகள் இக்காலகட்டத்தில் பெருமளவு வெளிவந்தன. உயிர் தமிழுக்கு, தமிழ் எங்கள் ஆயுதம் போன்ற தொகுப்புகள் இக்காலகட்டத்தைய தமிழ்த்தேசியக் கவிதைப் பண்புகளை வெளிப்படுத் துவனவாக விளங்குகின்றன.

(எ-டு) போர் முரசொன்று கேட்குதடா
புவியினின் ஈழத் திருநாட்டின்
சாரலின் வடக்கும் கிழக்கினிலும்
தமிழறை கூவி அழைக்குதடா [4]
– யாழ்ப்பாணன் –

பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை ஒட்டியே நவீன கவிதைகள் உருவாகிவந்த நிலைமை விரிவடைந்து ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் நவீன கவிஞர்கள் தோற்றம் பெற்றனர். அம்பி, சில்லையூர் செல்வராசன், காசிஆனந்தன், ராஜபாரதி, புரட்சிக்கமால், அண்ணல், பரமஹம்சதாசன், சக்தி அ.பாலையா முதலிய கவிஞர்கள் பலரும் இக்காலகட்டத்தில் கவிதையுலகில் பெரிதும் அறியப்பட்டவர்களாக இருந்தனர் என்றபோதும், மஹாகவி, நீலாவணன், முருகையன் ஆகிய மூவருமே இவர்களுள் பிரதானர்களாக விளங்கினர்.

1958 இல் அரசாங்க சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சையைத் தமிழில் எழுதவும், வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தைத் தமிழில் நடாத்தவும் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமை 60 களின் தொடக்கத்தில் இத்தகைய தமிழுணர்ச்சிக் கவிதைகளின் உக்கிரத்தைக் குறைத்தது. எனினும், சில கவிஞர்கள் தொடர்ந்தும் தமிழ்த்தேசிய உணர்ச்சிக் கவிதைப்பாதையில் பயணிக்கவே செய்தனர். அத்தகையோருள் காசிஆனந்தன் மிகுந்த முக்கியத்துவமுடையவர்.

(எ-டு) கூண்டுக்கிளி நிலை எத்தனைநாள் வரை?
கூப்பிடு கூப்பிடு வீரர்களை!
ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை
ஆள நினைப்பதில் என்ன குறை? [5]
– காசிஆனந்தன்

சமவேளையில், இடதுசாரித்தன்மை கொண்ட அரசு ஆட்சிப்பொறுப்பேற்றமை, இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி ஆகியன வடஇலங்கையிலும் இயங்கத் தொடங்கியமை, ஆளுமைமிக்க இடதுசாரிப் பிரமுகர்களால் தமிழ் இளைஞர்கள் பலர் ஆகர்ஷிக்கப் பட்டமை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எழுச்சி பெற்றமை முதலியவை காரணமாக, 60 களில் ஈழத்துத்தமிழ்க்கவிதைகள் புதிய திசையில் பயணிக்கத் தொடங்கின. ஈழத்துக்கவிதைகளில் தமிழ்த்தேசிய உள்ளடக்கம் குறையத் தொடங்க இலங்கைத் தேசிய உள்ளடக்கம் முனைப்புப்பெறத் தொடங்கியது.

(எ-டு) இலங்கையன் என்றதும் என் இனம் சாதி மதம்
எல்லாம் மறந்தேனே!
நிலம் ஒன்றிலே பிறந்தால் நெறிகுலம் யாவும் ஒரே
நிகர் நேர் சமம் தானே! [6]
– சில்லையூர் செல்வராசன்

இக்காலகட்டத்தில் முற்போக்குச் சித்தாந்தங்களை உள்வாங்கிய அரசியற் கட்சிகள், சமூக இயக்கங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய கவிஞர்கள் தோற்றம் பெற்றனர். சுபத்திரன், பசுபதி, புதுவை இரத்தினதுரை, எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இவர்களுள் சிலர். ஒடுக்கப்பட்ட வர்க்க, சாதிப்பிரிவுகளிலிருந்தும் பலபடைப்பாளிகள் உருவாகினர். ஏலவே, தமிழுணர்ச்சிக் கவிதைகள் படைத்துவந்த முருகையன் போன்ற சிலர், இக்காலகட்டத்தில் முற்போக்கு அணிச் சார்புடையவர்களாக மாற்றமுற்றனர். இத்தகைய முற்போக்குச் சித்தாந்த கவிதைகளுக்கு மல்லிகை முதலிய இதழ்கள் பிரசுரகளமாக விளங்கின.

(எ-டு) சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா! – அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க் கொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி யென்றாடுதடா! - தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினில்
சாதி படித்தனரோ - அதை
மோதி உடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய் [7]

- சுபத்திரன்

இவ்வாறு, பெரும் இயக்கமாக முற்போக்குச் சித்தாந்தம் எழுச்சியுற்ற இவ்வேளையில், இக்கொள்கையைச் சாராத கவிஞர்கள் பலரும் ஒருபுறம் சமுதாய அக்கறையுடன் தொடர்ந்தும் படைப்பாக்கத்தில் ஈடுபட்டே வந்தனர். பல்வேறு பாடுபொருள்களையும் உள்ளடக்கிப் பாடிய இக்கவிஞர்களுள் வி. கந்தவனம், மு. பொன்னம்பலம், காரை செ. சுந்தரம்பிள்ளை, ச.வே. பஞ்சாட்சரம், பா. சத்தியசீலன், ஜீவா ஜீவரத்தினம், மு. சடாட்சரன், கல்வயல் வே. குமாரசாமி முதலிய கவிஞர்கள் முக்கியமானவர்கள். இவர்களுக்கு கலைச்செல்வி மிகமுக்கியமான பிரசுரகளமாக விளங்கிவந்தது.

(எ-டு) நல்லறி வாண்மை இருக்கிறதா? - அது
நாளும் வளர்ந்து பெருக்கிறதா?
வல்ல திறமைக் கருக்குளதா? -எனின்
வந்து படைப்புகள் தந்திடலாம்.

நெஞ்சம் பரந்து விரிந்தவரா? -பொருள்
நேர்மையில் நின்று புரிந்தவரா?
கொஞ்சும் எளிமை தெரிந்தவரா - எனின்
கோர்த்திடலாம் அதை வார்த்திடலாம் [8]

- வி. கந்தவனம்.

1970 ஆம் ஆண்டு தரப்படுத்தல் மூலம் உயர்கல்வி பெறுவதில் தமிழ்மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் அதனை எதிர்க்கவென தமிழ்மாணவர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பாதிப்புற்ற பெருமளவிலான தமிழ் இளைஞர்கள் போராளிகளாயினர். இதேவேளை தமிழ்மொழிக்கு சமஅந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்கின்ற தம்கோரிக்கை தோல்வியடைய அரசியல் அமைப்புப் பேரவையில் இருந்து தமிழ் உறுப்பினர்கள் பலரும் வெளியேறினார்கள். 1972 இல் தமிழரசுக்கட்சியினர், ஏனைத் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்கள், மலையகத்தமிழ்த் தலைவர்கள் ஆகியோர் இணைந்து தமிழர் ஐக்கியமுன்னணியை உருவாக்கினார்கள். 1973 இல் போராட்ட எண்ணமுடைய இளைஞர்களால் தமிழ் இளைஞர்பேரவை உருவாக்கப்பட்டது. இதனைச் சார்ந்த பல இளைஞர்கள் இலங்கை அரசால் குற்றம் சுமத்தப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டனர். 1974 இல் இடம்பெற்ற நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய அரசியற் பின்புலமானது 70 களில் தமிழுணர்ச்சி மற்றும் தமிழ்த்தேசியம் சார்ந்த கவிதை களை மீள் முக்கியத்துவம் உடையதாக்கியது. கூடவே, தமிழ்நாட்டுக் கவிதைச் சூழலில் புதுக்கவிதை பெற்றுவந்த செல்வாக்கின் பாதிப்பும் இணைய, சமூக அரசியல் உணர்வுகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கும் தனிநிலைப் புதுக்கவிதைகள் ஈழத்தில் இக்காலத்தில் தோற்றம் பெற்றன. தமிழ்நாட்டுப் புதுக்கவிதைச்சூழலில், ஒருபுறம் 1959 இலிருந்து வெளிவர ஆரம்பித்த எழுத்து இதழ் அகச்சார்பான கட்டிறுக்கமுள்ள கவிதைப்பாணியை வளர்த்தது என்பதும், மறுபுறம் வானம்பாடி இதழ் புறச்சார்பான நெகிழ்ச்சியான கவிதைப்பாணியை வளர்த்தது என்பதும் தெரிந்ததே. அக விசாரத்தோடு பல விடயங்களையும் வெளியிட்டுவந்த பிரமிள் ( தருமு சிவராமு) எழுத்துப்பாணிக் கவிதைகள் எழுதிய ஈழத்தவராவார். 70களில் ஈழத்தில் முனைப்புப் பெறத் தொடங்கிய புதுக்கவிதைகளுள் இவ்விரு பாணியினதும் பாதிப்பில் தோற்றம் பெற்ற கவிதைகளும் குறிப்பிடத்தக்களவு இருந்தன. எனினும், ஈழத்து அரசியல் பின்புலத்தால் தமிழ்நாட்டுப் புதுக்கவிதைப் போக்கிலிருந்து வேறுபட்ட, தனித்துவம் மிக்க, நேரடித்தன்மை வாய்ந்த சமூக, அரசியற் புதுக்கவிதைகள் ஈழத்தில் தோன்ற ஆரம்பித்தன. முற்போக்கு விடயங்களை மிகவும் வெளிப்படையாகவும் எளிமையாகவும் தந்த தா.இராமலிங்கம் மற்றும் சி. சிவசேகரம், வ.ஐ.ச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயபாலன் முதலியோருடைய கவிதைகள் இங்கு உதாரணங்களாகக் கொள்ளப்படக்கூடியன.

(எ-டு) மீண்டும் சிரிப்பு,
நேபாம் குண்டுகளே
நாணிடும் சிரிப்பு.
போராட்டத்தை அர்த்தப்படுத்தும்
புழுதி தோய்ந்த புதல்வரின் சிரிப்பு.
ஆயிரம் காட்டுத் தீயும்
அணைந்தே போகும்.
முகங் கொடுக்கும் புல்வெளிகளோ
பூத்துக் குலுங்கும் [9]

– வ.ஐ.ச. ஜெயபாலன்

முற்போக்கு அணிசார்ந்து இடதுசாரிச் சிந்தனைகளுடன் வர்க்கவிடுதலையை நோக்கமாகக் கொண்டு இயங்கிவந்த கவிஞர்கள் சிலரும், இனபேதம் கடந்தநிலையில் வர்க்கவிடுதலையைச் சாத்தியமாக்குவதன் இயலாமையைப் புரிந்துகொண்டு தமிழ்த்தேசியச் சார்புக்கவிதைகளை இக்காலத்தில் ஆக்கத் தொடங்கினர் (புதுவை இரத்தினதுரை). மேலும், 60 களின் நடுப்பகுதியில் சோவியத், சீனநாடுகளிடையே ஏற்பட்ட பிரிவினையைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்டமையும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வலிகுன்றியமையும் இடதுசாரி முற்போக்குக் கவிதைகளின் முதன்மைநிலையைத் தளரச்செய்தன.

70களில் மெல்லமெல்ல வன்மம் பெற்ற தமிழருக்கு எதிரான அடக்குமுறை 80களில் மிகக்கடுமையாக உக்கிரம் பெற்றது. தமிழர்களின் தலையாய அறிவுத்தேட்ட நிலையகமாகக் கொள்ளப்பட்டு வந்த யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், 1981 இல் எரிக்கப்பட்டமையும், 1983 இல் கொழும்பிலும் பிற இடங்களிலும் மிகக் கொடூரமானமுறையில் இடம்பெற்ற தமிழருக்கெதிரான வன்முறைகளும் பேரினவாதிகளின் உக்கிரமான போக்கைக் காட்டவல்லன. இத்தகைய இனமுரண்பாட்டு யுத்தச்சூழ்நிலையில் இலக்கியத்துள் பிரவேசித்த பரம்பரையொன்று 70களின் நிறைவிலும் 80 களின் தொடக்கத்திலும் தோற்றம் பெற்றது. இத்தலைமுறையின் கவிதைகள் இனமுரண்பாட்டின் கொடுமையையும், போருக்கான அழைப்பினையும் தாங்கியனவாகவும், வெளிப்படையாகப் பேசுந்தன்மை கொண்டனவாகவும் விளங்கின. சேரன், செழியன், இளவாலை விஜயேந்திரன் முதலிய பலரின் கவிதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

(எ-டு) எனது நகரம் எரிக்கப்பட்டது.
எனது மக்கள் முகங்களை இழந்தனர்.
எனது நிலம், எனது காற்று,
எல்லாவற்றிலும் அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று.
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து
எழுந்து வருக. [10]

– சேரன்

ஆரம்பகால ஆயுதவிடுதலைக் குழுக்களைச் சார்ந்த போராளிகள் கூட கவிதைகளை குறிப்பிடத்தக்களவு எழுதினர். அலை, புதுசு முதலிய இதழ்களின் வெளிவருகை, இக்காலத்தைய கவிதைகளுக்கு ஏற்ற பிரசுர களத்தை வழங்கி உதவியது.

70களின் பிற்கூறுகளில் எழுந்த கவிதைகள் சிங்களப்பேரினவாதிகளைக் கண்டிப்பனவாகவும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தெம்பூட்டி வீறுகொள்ளச் செய்வனவாகவும் மட்டுமே விளங்கின. 80 களில் ஈழத்து இனமுரண்பாட்டுச்சூழலில் முதன்முறையாக, இந்தியா வெளிப்படையாக பங்கேற்கத் தொடங்கியது. 1987 இல் இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிகாக்கும் படையினரின் வருகையும் அதனால் ஈழத்தமிழர்கள் அடைந்த கடுமையான பாதிப்பும் ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பில் இந்திய அரசியல் மேலாதிக்கத்திற்கெதிரான கவிதைகளைத் தோற்றுவித்தன.

80களில் தமிழ் விடுதலைக் குழுக்களுக் கிடையில் முரண்பாடுகள் தோன்றிவளரத் தொடங்கின. இதனால் அவை பரஸ்பரம் தமக்குள் மோதிக்கொண்டன. தமிழர்களுக்கும் பெரும்பான்மையினத்தவர்களுக்குமான மோதலின் இடையே, தமிழர்களுக்கும் தமிழர்களுக்குமான இத்தகைய மோதல்களும் – அவற்றால் உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இத்தகைய நிலைக்கு இரங்கியும், அம்மோதல்களை நிறுத்தக்கோரியும் கவிதைகள் பல தோற்றம் பெற்றன.

இலங்கையின் இன்னுமொரு சிறுபான்மையி னரான முஸ்லிம்கள், சிங்கள – தமிழ் இனமுரண்பாட்டுப் போரின்போது பேரி– னவாதிகளாலும் தமிழீழ விடுதலைக் குழுக்களாலும் பாதிக்கப்பட நேர்ந்தது. பள்ளிவாயில்களில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும், வடக்கின் சில பகுதிகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டதும் முஸ்லிம் தேசியக்குரல் ஒலிக்கும் கவிதைகளை 90களில் தோற்றுவித்தன. இவ்வியல்பை வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன் போன்ற தமிழ்க்கவிஞர்களதும், அஷ்ரப் சிஹாப்தீன், ஆத்மா போன்ற முஸ்லிம் கவிஞர்களதும் படைப்புகளில் காணுதல் முடியும்.

பேரினவாதம் மற்றும் குழு மேலாதிக்கம் என்பவற்றுக்கான எதிர்ப்புக்குரல் இக்காலகட்டப் பகுதி யில் பல இளந்தலைமுறையினர்களாலும் கவித்துவமாக வெளிப்படுத்தப்பட்டன. இவ்வாறான கவிதைகளுக்கு சரிநிகர் முதலிய இதழ்கள் முக்கியத்துவம் வழங்கின. மேலும், வெளிப்படைத்தன்மை நிரம்பிய ஈழத்து அரசியல் கவிதைகளின் வருகை தொடர்ந்து வந்த அதேவேளை, சிக்கல் தன்மை மிக்க வெளிப்பாட்டு முறையிலமைந்த கவிதைகளின் வரவும் தொடங்கிற்று. இத் தன்மைய கவிதைகளை எழுதுபவர்களுக்கு சோலைக்கிளி ஆதர்சமாக விளங்கினார்.

20ஆம் நூற்றாண்டு நிறைவடை யும் தருணத்தில், விடுதலைப்போருக்கான ஆதரவுக் கவிதைகள் தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருந்த அதேவேளை, போராலான கடுமையான சிதைவின் விரக்தியினால், இனியும் போர் தொடரவேண்டுமா? என்கின்ற குரல்களும், சமாதானத்தை அவாவும் குரல்களும் இடையிடையே கவிதைகளாக வெளிவரத்தொடங்கியுள்ளன.

(எ–டு) இருண்ட கண்டத்தில்
அவளறியாதோர் மூலையில்
மூப்புப் பிணியோடு
பார்த்திருக்கிறாள்
அம்மா.

துருவப் பனிக்கொதுங்கி
சாரளத்து ஓரத்தில்
காத்திருக்கிறேன்
நான்.

இன்னமும் எதை வேண்டி
தொடர்கிறது
போர்? [11]

– திருமாவளவன்

மொத்தத்தில், நிறைவுக் கால்நூற்றாண்டுப் பகுதியில் இனமுரண்பாட்டு விடயங்களும் அவை தொடர்பில் தமிழ்த்தேசியமும் ஈழத்துக்கவிதைகளின் உள்ளடக்கமாயின. இவை சிற்சில மாறுதல்களோடு நூற்றாண்டின் நிறைவு கடந்தும் தொடர்ந்து கொண்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்:**

1. சுப்பையனார், கனகி புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரசாந்தன், ஸ்ரீ. (தொடர்), இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள், ப.199.

03. மேலது. ப. 157

04. பார்க்க: தமிழ் எங்கள் ஆயுதம்.

05. பார்க்க: காசி ஆனந்தன் கவிதைகள்.

06. பார்க்க: சில்லையூர் செல்வராசன் கவிதைகள்.

07. பிரசாந்தன், ஸ்ரீ. மு.கு.நூ. ப.180

08. பார்க்க: இலக்கிய உலகம்.

09. பார்க்க: வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் – நெடுந்தொகை.

10. பிரசாந்தன், ஸ்ரீ.மு.கு.நூ. ப. 192.

11. திருமாவளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனைட்டட் மேர்ச்சன்ட்ஸ் பிரின்டர்ஸ் (பிரை) லிமிட்டெட். தொ.பே : 2434281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org